விலை: 30.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 073 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 18 புதன்கிழமை (02.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


## நாடு முழுவதும் இன்று
# 7½ மணி நேரம் மின்வெட்டு

*(கொழும்பு)*

**எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நாடு முழுவதும் இன்று 7 1/2 மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

மின்சார உற்பத்திக்கு தேவையான எரிபொருள் பற்றாக்குறையால் மின்வெட்டை அமுல்படுத்த அனுமதி வழங்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கே பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, ஈ.வலயத்துக்கு காலை 8 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரையும் எஃப் வலயத்துக்கு பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணிவரையும் மின்வெட்டு அமுல் படுத்தப்படவுள்ளது. 15

## எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த வாகனங்கள்



(கொழும்பு)
நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை வாகன சார 15

## மார்ச் 5ஆம் திகதி முதல்
# தடையின்றி மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)
மார்ச் மாதம் 5ஆம் திகதி முதல் தடை இன்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக, மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இதற்காக, மின்னுற்பத்தி நிலையங்க 15

## பயங்கரவாத தடைச்சட்டம்
# கருத்து சுதந்திரத்திற்கு தடையாக இல்லை
## ஐ.நாவில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்

*(ஜெனிவா)*

**பயங்கரவாத தடுப்புச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தக் கூடாது என்பதில் இலங்கை உறுதியாக இருக்கிறது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஐ.நாவில் தெரிவித்துள்ளார்.**



ஐ.நாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடரின் உயர்மட்டப் பிரிவுக் கூட்டத்தில், கலந்து கொண்டு உரையாற்றும்போதே, ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத தடுப்புச்சட்டம், விசார 15



## வங்கக்கடலில் தாழமுக்கம்
வடக்கில் இன்று மழைக்கு சாத்தியம்

(கிளிநொச்சி)
தற்போது வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக இன்று 2 ஆம் திகதி இரவிலிருந்து மழை பெய்வதற் 15

## கொரோனா
# 22 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் மேலும் 22 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் இதுவரை 16, 15

## ரஷ்யா - உக்ரைன்
# இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தை இன்று

(கோமல்)
உக்ரைன் ரஷ்ய போர் தொடர்பில் முதற்கட்ட பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏதும் ஏற்படாத நிலையில் இன்று மீண்டும் பேச்சுவார்த்தை 15

## எரிபொருளை தடையின்றி விநியோகிக்க
# துரித நடவடிக்கை எடுங்கள்
## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



(கொழும்பு)
மின் நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை தடையின்றி பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துமாறும், மின்னுற்பத்திக்கு தேவையான எரிபொ 15

## திருமலையில் கோர விபத்து
# பங்குத் தந்தையும் சாரதியும் உயிரிழப்பு

(திருகோணமலை)
ஹொரவபொத்தானை - திருகோணமலை வீதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் பங்குத்தந்தையும், சாரதியும் 15

## நாட்டில் மேலும்
# +914 பேருக்கு கொரோனா

(கொழும்பு)
நாட்டில் நேற்று மேலும் 914 பேரு 15

## ஆலய தேர்த்திருவிழாவில் 4 பேரின் சங்கிலி அறுப்பு
### 9 பேர் கைது

(திருநெல்வேலி)
யாழ். திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழாவில் பக்தர்களின் தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட பெண்களின் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உக்ரைனில் அமைந்துள்ள உலகின் 2ஆவது மிகப்பெரிய கோபுரம் மீது

## ரஷ்யா ஏவுகணை தாக்குதல்



(கீவ்)
உக்ரைன் - ரஷ்யா நாடுகளுக்கு இடையேயான போர் 6ஆவது நாளாக நீடித்து வருகின்றது.

ரஷ்ய படைகள் உக்ரைனின் மிகப்பெரிய 2ஆவது நகரான கார்கீவ் மீது மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கு, உக்ரைன் இராணுவம் ரஷ்ய படைகளுக்கு பதிலடி கொடுத்து வருகின்றது.

இந்நிலையில், கீவ் நகரில் உள்ள உலகின் 2 ஆவது மிகப்பெரிய தொலைக் காட்சி கோபுரம் அருகே ரஷ்ய இராணுவம் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உலகின் 2ஆவது மிகப்பெரிய தொலைக்காட்சி கோபுரம் 1,263 அடி உயரம் கொண்டதுடன், உக்ரைன், கார்கிவ் நகரில் உள்ள குடியிருப்பு பகுதியில் ரஷ்யா வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் சரஸ்வதி



குப்பிளான், ஊரங்குணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு - 06 வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி மயில்வாகனம் சரஸ்வதி அவர்கள் கடந்த 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா மயில்வாகனத்தின் பாசமிகு மனைவியும் இராசையா - அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும் கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் மருமகளும் கணேசானந்தன் (ஜேர்மனி), தயாபரன் ஜெயலக்ஷ்மி (லண்டன்), ஜெயந்திரன் வனஜாதேவி (IT ஆசிரியர் - சைவ மங்கையர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேனுகா (ஜேர்மன்), தயாபரன் (லண்டன்), ஜெயந்திரன் (Deputy Editor features - தினக்குரல்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மிதுசா, மாதவன், மிளானி (ஜேர்மன்), நிர்மிதா, நீவிதா, திஷாங்கன் (லண்டன்), ஆருஷன், அபிஷனா, அக்ஷனா ஆகியோரின் பேர்த்தியாரும் காலஞ்சென்ற ஆறுப்பிள்ளை, தில்லைமுத்து, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கமலநாதன், தங்கரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல.42, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை இல்லத்தில் நாளை (03.03.2022) வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக் கிரியைகள் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 644 9885

(C-3882)

## மரண அறிவித்தல்

### இராசா இராஜ்குமார் (றஞ்சன்)

(சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் - கோல்டன் ஈகிள்)



வெளிப்புலம், சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் அம்பனை சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட இராசா இராஜ்குமார் (றஞ்சன் - சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர், கோல்டன் ஈகிள்) அவர்கள் கடந்த 28.02.2022 அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சௌபாக்கியவதியின் (ஆத்தை) அன்புக் கணவரும் சிறிகஜானி (செலிங்கோ லைப் இன்சுரன்ஸ்), கிசாயினி (ஆசிரியை - யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்), கோகிலானி (ஆசிரியை - வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமாரி, சூரியகுமாரி (லண்டன்), ஈஸ்வரகுமார் (லண்டன்), சுரேஸ்குமார் (லண்டன்), மிதுனகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆதவனின் (அதிபர் - சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலை) அன்பு மாமனாரும் கிருஷ்ணிகன், ரித்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.02.2022 திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

அம்பனை,
சுன்னாகம் மேற்கு.

(C-3883)

தகவல்: குடும்பத்தினர்
021 224 2217, 077 614 4150

# 5 நாட்களின் பின் மின்வெட்டு நிறுத்தம்

## நிதியமைச்சர் பசில்


(கொழும்பு)

எதிர்வரும் ஐந்து நாட்களுக்குப் பின்னர் மின்வெட்டை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்காக மின்சார சபைக்கு தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இருந்து எரிபொருளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் புகையிரத திணைக்கள களஞ்சியசாலைகளிலும் எரிபொருளை சேமிப்பதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம)

16ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
செல்லையா வீரசிங்கம்

11ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் திருமதி
இராசமணி வீரசிங்கம்

திதி:02.03.2022

ஆண்டுகள் கோடி ஓடி மறையும் அழிந்திடுமோ உம் நினைவலைகள். நாம் வாழ்ந்திடும் காலம் முழுவதும் எம் நெஞ்சினில் நிலையாய் வாழ்வீர். மாண்டவர் மீண்டிலர் என்பது உண்மை உம் காலடிகளை தொழுதே வாழ்கிறோம்.

இல.14, சிறிவெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3881)

உங்கள் நினைவுகளுடன்
மகன் சிறிதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்களுடன் ஏனைய நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பு!

## நெருக்கடி நிலையில் மருத்துவமனைகள்

(கொழும்பு)

**நாட்டில் ஒமிக்ரோன் தொற்று மிகவும் வேகமாக பரவி வருகின்றமையால் கொவிட் தொற்றாளர்களுடன், ஏனைய நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து மருத்துவமனைகளில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.**



இந்நிலைமை மேலும் தீவிரமடையாமல் இருப்பதற்கு அனைவரும் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சுவாச நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் கீதால் பெரேரா தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஏனைய வைரஸ்களுடன் ஒப்பிடும் போது ஒமிக்ரோன் மிகவும் வேகமாகப் பரவுகின்றமையால் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதனால் மருத்துவமனைகளில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. காரணம் கொவிட் நோயாளர்கள் அனுமதிக்கப்படும் விடுதிகளில் ஏனைய நோயாளர்களை அனுமதிக்க முடியாது.

ஏற்கனவே இதய நோய் மற்றும் சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டு ஒட்சிசன் தேவையுடைய நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறான நோயாளர்கள் இருக்கும் பகுதிகளில் கொவிட் நோயாளர்களை அனுமதித்தால் அது அபாயம் மிக்கதாகும்.

எனவே சகலரும் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இவ்வாறான பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ள ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சிலருக்கு தொற்றின் போது எவ்வித அறிகுறிகளும் காண்பிக்காத போதிலும் , சுமார் 4 வாரங்களின் பின்னர் ஏனைய நோய் நிலைமைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு அறிகுறிகள் தென்படுபவர்கள் பொருத்தமான மருத்துவரை நாடி உரிய ஆலோசனைகளைப் பெற வேண்டும் என தெரிவித்தார். (4)

## 160 சங்குகளுடன் ஒருவர் கைது

(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊர்காவற்றுறை - மெலிஞ்சிமுனை பகுதியில் சட்ட விரோதமாக கடற் சங்குகளை வைத்திருந்த 67 வயதுடைய நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது அவரிடமிருந்து 160 கடற் சங்குகள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-6-104)

## பயங்கரவாத சட்டத்திற்கு எதிராக

# கூட்டமைப்பு பிரேரணை கொண்டு வந்தால் அதற்கு முழு ஆதரவு வழங்குவோம்

## பேராசிரியர் திஸ்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்து செய்ய தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற மட்டத்தில் யோசனையினை கொண்டு வந்தால் அதற்கு ஆதரவு வழங்குவோம் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தக்காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்த ப்பட்டதன் தாக்கம் இன்றுவரை தொடர்கிறது. யுத்தம் நிறை வடைந்து 12 வருடங்கள் நிறை வடைந்த நிலைமையிலும் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பது முறையற்றதாகும்.

பயங்கரவாத தடைச்சட்டம் தற்போதைய காலகட்டத்தில் அரசியல் நோக்கங்களுக்காக செயற்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது.

பயங்கரவாத தடைச்சட்டம் ஊடாக கைது செய்யப்பட்டு நீண்டநாட்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டவர்கள் பலர் கடந்த காலங்களில் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

பயங்கரவாத தடைச்சட்டம் மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு சார்பாக அமையும் என்ற காரணத்தினால் சர்வதேச நாடுகள் தொடர்ந்து பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்யுமாறு வலியுறுத்துகின்றன.

உலகில் ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயற்படும் நாடுகளில் பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற சட்டங்கள் நடைமுறையில் இல்லை.

இளம் தலைமுறையினர் மத்தியில் தீவிரவாத கொள்கைகள் ஏதும் கிடையாது என்பதை நன்கு விளங்கிக்கொள்ள முடிகிறது என தெரிவித்தார். (4)

# புதிய சுகாதார வழிகாட்டி வெளியிடப்பட்டது

(கொழும்பு)

கொரோன தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய சுகாதார வழிகாட்டுதல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ளார்.

கொரோன தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக இதுவரை பல பகுதிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை குறைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே, உணவகங்கள், வணிக வளாகங்கள், கடைகள், நிதி நிறுவனாங்கள், உயர் கல்வி நிறுவனாங்கள், திரையரங்குகள், உடற்பயிற்சி மையங்கள், விளையாட்டு, இறுதிச் சடங்குகள், பயிற்சி வகுப்புகள், பரீட்சைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்த சுகாதார அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மக்கள் சரியான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என்று புதிய வழிகாட்டுதல்கள் தெரிவித்துள்ளது.

பதிய வழிகாட்டுதல்களில் திருமண மண்டபத்தின் அளவிற்கு ஏற்ப 75 சதவீதமானவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படுவதுடன், 75 சதவீதமானவர்கள் மட்டுமே தனிப்பட்ட கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் வர்த்தக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## 'ஒரே நாடு ஒரே சட்டம்'

# ஜனாதிபதி செயலணியின் பதவி காலம் நீடிப்பு

(கொழும்பு)

ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய பொதுமக்கள் மற்றும் நிபுணர்கள் குழுவின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவே செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி "ஒரே நாடு, ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணி நிறுவப்பட்டு அதற்கு தலைவராக ஞானசார தேரரை ஜனாதிபதி நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# சுகாதார தொழிற்சங்கங்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பில்

(கொழும்பு)

நாளை முதல் 2 நாட்களுக்கு மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைளை முன்னெடுக்கவுள்ளதாக சுகாதாரத் தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட தங்களது கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு, அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்காமை காரணமாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 7 ஆம் திகதி முதல், 9 நாட்களுக்கு தாதியர் உள்ளிட்ட 18 சுகாதாரத் தொழிற் சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் 'நீலங்களின் சமர்'
# கிரிக்கெட் தொடர் ஆரம்பம்



நீலங்களின் சமர் முக்கோண கிரிக்கெட் தொடர் வவுனியாவில் ஆரம்பமானது.

குறித்த முக்கோண கிரிக்கெட் தொடரினை ஐயனார் விளையாட்டு கழகம், தமிழ் யுனைடெட் கழகம், ஸ்ரார் பைட் விளையாட்டு கழகம் ஆகியன இணைந்து நடத்துகின்றன. இதன் முதல் போட்டி நகரசபை மைதானத்தில் ஐயனார் விளையாட்டு கழகத்திற்கும், தமிழ் யுனைடெட் கழகத்திற்கும் இடையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஐயனார் விளையாட்டு கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது. 50 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐயனார் விளையாட்டு கழகம் 31.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 136 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

அணி சார்பாக துடுப்பாட்டத்தில் பே. அனோஜன் 29 பந்துகளிற்கு முகம்கொடுத்து 03 சிக்ஸ், 02 பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களையும், க. அனுசன் 03 சிக்ஸ் மற்றும் ஒரு பவுன்டரி அடங்கலாக 29 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

137 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலகு வெற்றியுடன் களமிறங்கிய தமிழ் யுனைடெட் 22 ஓவர்களுக்கு மாத்திரம் முகம் கொடுத்து 103 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களை யும் இழந்து தோல்வியை தழுவிக்கொண்டது. (4-299)

# வடமாகாண கூடைப்பந்தாட்ட சுற்றுத் தொடர்





வடமாகாண கூடைப் பந்தாட்ட சுற்றுத்தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் பிரதமரின் இணைப்பு செயலாளர் கீதநாத் காசிலிங்கம் பிரதம விருந்திராக கல்ந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் முரளிதரன் மற்றும் யாழ்.பிரதேச செயலாளர் சுதர்சன், யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கத்தின் தலைவர் என பலர் கலந்து கொண்டனர்.


இச் சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் 5, 6 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (4-33)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2524

லதாங்கி




பார்த்தீபன்




மதிஷா




அகிலன்




திவ்யா




அபிசன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாததால் உயிரை மாய்த்த தந்தை

## களுத்துறையில் துயரம்

(கொழும்பு)

தனது பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாத தந்தையொருவர், தற்கொலை செய்துகொண்ட துயரச் சம்பவம் களுத்துறை பகுதியில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை - வெலிபன்ன பகுதியில் வாடகை வீடொன்றில் வசித்து வந்த நாகராஜா ரஞ்ஜன் என்ற தந்தை ஒருவரே இவ்வாறு தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவரின் மனைவி தெரிவிக்கையில், "மூன்று நாட்கள் வீட்டில் உணவு இருக்கவில்லை. பிள்ளைகளுக்கு ஏதாவது உணவு தேடி வருவதாகக் கூறி, கணவர் சென்றார். அவர் வீட்டிற்கு மீண்டும் வருகை தராததை அடுத்து, வீட்டிலிருந்த நாற்காலிகளை விற்பனை செய்து, பிள்ளைகளுக்கு உணவு செய்து கொடுத்தேன்.

தனது கணவருக்கு நிரந்தரத் தொழில் இருக்கவில்லை. கூலித் தொழில் செய்து, அதில் கிடைக்கும் பணத்திலேயே வாழ்க்கையை கொண்டு சென்றோம்.

உணவு கொண்டு வருவதாகச் சென்றவர் உறவினர் ஒருவரின் வீட்டிற்கு அருகில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். பிள்ளைகளுக்கு உணவு வழங்க முடியாமையினால், கணவர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என தெரிவித்தார்.

வெலிபென்ன சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையிலேயே அவர் இந்த வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெலிபென்ன பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)

# 2,400 ரூபாய்க்கு ஒரு கிலோ மஞ்சள்



(கொழும்பு)

ஒரு கிலோ மஞ்சளை 2,400 ரூபாவுக்கு எந்தவொரு சதொச மற்றும் இலங்கை மசாலா நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு சுத்தமான மஞ்சள் கிடைக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தொற்று நோய் காலங்களில், உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ மஞ்சள் 8 ஆயிரம் ரூபாவிற்கு விற்கப்பட்டது.

மஞ்சளின் தேவை நாட்டில் அதிகரித்தமையினால் இறக்குமதியை தடை செய்ய ஜனாதிபதி தீர்மானித்ததுடன், மக்கள் தமது சொந்த மஞ்சள் அறுவடை மூலம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு ஊக்குவித்தார்.

இந்த முடிவு அமுலுக்கு வருவதற்கு முன், இந்தியாவில் இருந்து மஞ்சள் இறக்குமதி செய்யப்பட்டது.

விவசாய சமூகத்தை ஊக்குவித்ததன் மூலம், நாடு குறிப்பிடத்தக்க மஞ்சள் அறுவடையை மேற்கொண்டது. தரமான மஞ்சளில் நாடு தற்போது தன்னிறைவு பெற்றுள்ளது. (4)

# விவசாயிகளுக்கு இழப்பீடு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

பெரும்போக விவசாய நடவடிக்கையில் உர பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் வாரம் முதல் ஒரு ஹெக்டேயர் நிலப்பரப்பிலான விவசாய நிலத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்கப்படும் என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஒரு கிலோ நெல்லுக்கு 25 ரூபாய் வீதம் இழப்பீடு வழங்குவதற்கு பொருத்தமான முறையொன்றை உருவாக்க அமைச்சரவை முன்னதாக அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அதன்படி, உயர்ந்தபட்ச அளவாக 5 ஏக்கர் நிலப்பரப்பை பயிர்ச்செய்கைக்காக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற இருவர் மாயம்

(கொழும்பு)

வெல்லவாய - எல்லாவல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற இருவர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

21 மற்றும் 22 வயதுகளையுடைய இரு இளைஞர்களே இவ்வாறு நீரில் இழுத்துச் செல்லப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இருவரையும் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (4)


# நினைவழியா மூவாண்டு



அமரர் வைத்திய கலாநிதி

**நடராஜா சிவராஜா**

ஏங்களிடம்:- 12.04.1938 இறைவனிடம்:- 06.03.2019

திதி : அமரபக்க அமாவாசை

நீங்கள் வாழ்ந்தவரை யாரும்
உங்களை வெறுக்கவில்லை.
வாழ்ந்து முடித்த பின்பும் யாரும்
உங்களை மறக்கவில்லை
என்றும் எங்களுடன் இருப்பீர்கள்
உங்கள் ஆன்மா இறைவனடியில் சாந்தி
பெற பிரார்த்திக்கிறோம்.

(1047)

47/3 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலைஅரசி சிவராஜா
மற்றும் குடும்பத்தினர்.


# இராசிபலன்

02.03.2022
மாசி 18, புதன்கிழமை
அமாவாசை முன்னிரவு 11.58 மணிவரை
சதயம் பின்னிரவு 3.32 மணிவரை
சுபநேரம் - 4.57-6.27 மணிவரை
இராகுகாலம் -12.27-1.57 மணிவரை
அமாவாசை விரதம், விபூதி புதன்
சந்திராஷ்டமம்-பூசம்

**வளவன்**

**மேஷம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**ரிஷபம்** — உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** — சான்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள்.

**கடகம்** — சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்** — குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** — சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினரின் நலனில் அக்கறை கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** — சென்ற இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர், போசன சுகமுண்டு.

**தனுசு** — விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** — வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** — தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு.

அதிகமாகப் பேசுபவன் குறைவாகச் சிந்திக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையின்றி எரிபொருளை கொள்வனவு செய்ய வேண்டாம்

# பொதுமக்களிடம் அரசாங்க அதிபர் வேண்டுகோள்



(குப்பிழான்)

**யாழ்.மாவட்டத்தில் 30 ஆயிரம் லீற்றர் பெற்றோல் மேலதிகமாகப் பொது மக்களால் கொள்வனவு செய்யப்படுகிறது. நாள் ஒன்றிற்கு ஒரு இலட்சம் லீற்றர் பெற்றோல் தேவைப்படும் நிலையில் தற்போது பொது மக்களால் 1 இலட்சத்து 30 ஆயிரம் லீற்றர் பெற்றோல் கொள்வனவு செய்யப்படுகின்றது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு முழுவதும் தற்போது எரிபொருள் பற்றாக்குறை காணப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் தட்டுப்பாடு நிலைமையை இல்லாமல் செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். நாள் ஒன்றுக்கு யாழ். மாவட்டத்துக்கு 1 இலட்சம் லீற்றர் பெற்றோல் தேவைப்படுகிறது. ஆனால், தற்போது நாளொன்றுக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் லீற்றர் பெற்றோல் தேவைப்படுகிறது. தட்டுப்பாடு ஏற்படும் என்ற எண்ணத்தில் அதிமாக மக்கள் பெற்றோலைக் கொள்வனவு செய்கின்றனர். அதேபோன்று நாளொன்றுக்கு 1 இலட்சத்து 25 ஆயிரம் லீற்றர் முதல் இலட்சத்து 50 ஆயிரம் லீற்றர் வரை டீசலும், அத்துடன் 50 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணையும் தேவைப்படுகின்றது. ஆகவே, எரிபொருளைத் தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கு ஏற்ற வகையில் கலந்துரையாடி வருகின்றோம். எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள். அதிகளவில் எரிபொருளைக் கொள்வனவு செய்ய வேண்டாம் என பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

கையிருப்பில் உள்ள பெற்றோலை வைத்து இப்போது சமாளிக்க முடியும். வேறு இடத்தில் உள்ள மக்களும் இங்கே வந்து டீசலைக் கொள்வனவு செய்கின்றனர். அத்துடன் வெளி மாவட்டப் பயணங்களில் ஈடுபடும் வாகனங்கள் அதிகளவில் எரிபொருளைக் கொள்வனவு செய்யும் நிலை காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார். (க-6-4-18)

# கட்டாக்காலி மாடுகளால் சிறுதானியச் செய்கை பாதிப்பு

## விவசாயிகள் கவலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட வயல் நிலங்களில் நெற்பயிர்ச் செய்கையின் பின்னரான சிறுதானியச் செய்கைக்கு கட்டாக்காலி மாடுகளால் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக சிறுதானியச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் தென்மராட்சியின் பல பாகங்களிலும் வயல் நிலங்களில் சிறுதானியப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக இராணுவத்தினர் கமக்கார அமைப்பினரை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

சில கமக்கார அமைப்பிற்குட்பட்ட பகுதிகளில் கால் நடை வளர்ப்போர் பொறுப்புடன் நடந்துகொள்கின்ற போதிலும், தனங்கிளப்பு உள்ளிட்ட சில பகுதிகளில் நெல் அறுவடை நிறைவடைய முன்னராகவே வயல் நிலங்களில் கட்டாக்காலி மாடுகளின் வருகை காணப்படுகிறது.

இதன் காரணத்தால் நெல் அறுவடையின் பின்னர் சிறுதானியச் செய்கையில் ஈடுபட்ட, ஈடுபடவுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே உரிய தரப்பினர் கட்டாக்காலிகளின் வருகையை கட்டுப்படுத்தி சிறுதானியப் பயிர்களின் விளைச்சலைப் பெற உதவ வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6-4-30)



பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி, கொடிகாமம் ஆகிய இடங்களில் இடம்பெற்றது. (படம்-மகாலிங்கம்,சிவசாந்தன்,சுபேசன்)



கொக்குவில் இந்துக் கல்லூரியின் பெண் சாரணர்களின் ஒழுங்கமைப்பில் முத்தமிழ் மன்றத்தில் இரத்ததான முகாம் கடந்த 27 ஆம் திகதிநடைபெற்றது. இரத்ததான நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தின் செயலாளர் செல்லத்துரை தேவறஞ்சன் கலந்து கொண்டார்.

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும்கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் வீரபத்திரர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சி.ஞானசம்பந்தக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-6-4)

# நன்றி விழா

(யாழ்ப்பாணம்)

"புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" திரைப்படக்குழுவினரின் நன்றி விழா இன்று 2 ஆம் திகதி புதன் கிழமை திவ்ய மஹால் மண்டபத்தில் மாலை 6.01 மணிக்கு நடைபெறும் என திரைப்பட குழுவினர் அறிவித்துள்ளனர். (4)

# "அனைவருக்கும் சித்தா" இலவச சித்தமருத்துவ முகாம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்துடன் இணைந்து, ஆசாதிகா அம்ரித் 'மஹோத்சவ்' கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, "அனைவருக்கும் சித்தா" எனும் உயரிய விழிப்புணர்வு பரப்புரையின் அடிப்படையில், கடந்த 27 ஆம் திகதி முல்லைத்தீவு விசுவமடு மத்திய சனசமூக நிலையத்தில் மூன்றாவது இலவச "சித்த மருத்துவ முகாமை" ஒன்றை நடத்தியது.

குறித்த இந்த சித்த மருத்துவ முகாமிற்கு 135 இற்கும் மேற்பட்ட அனைத்து வயதுப் பிரிவினரும் வருகை தந்து தங்களின் நோய்களுக்கான இலவச மருத்துவ ஆலோசனைகள் மற்றும் இலவச சித்த மருந்துகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் சித்த மருத்துவ முறையின் முழுமையான பலன்களை விபரித்து சித்த மருத்துவ முகாமை நிறைவு செய்தார். இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எம்.பிரதீபன், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் திருமதி.கே.ஜெபனமகணே சன் மற்றும் சமூக மருத்துவ அதிகாரிகள், சித்த மருத்துவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-6-4-316)

# வெங்காய செய்கை பாதிப்பு பெரும் நட்டத்தில் விவசாயிகள்

(கரணவாய்)

அச்சுவேலி வடக்கு ஜே/285 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள பயிர்ச் செய்கை நிலங்களில் வெங்காய செய்கை மேற்கொண்ட நிலையில் அண்மையில் பெய்த மழை காரணமாக வெங்காய செய்கை பாரிய அழிவை சந்தித்துள்ளது.

இதனால் தாம் பெரும் நட்டத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் வாழ்வாதாரமும் கேள்விக் குறியாகியுள்ளது என அப் பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே கமநல திணைக்களம் இவ்வாறான அழிவுகளை நேரடியாக பார்வையிட்டு அதற்குரிய இழப்பீடுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அப் பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணி நேர மின்துண்டிப்பு வெகு விரைவில் ஏற்படும்

## மின்சாரசபை ஐக்கிய தொழிற்சங்க கூட்டமைப்பு

(கொழும்பு)

**நாட்டில் தற்போது முன்னெடுத்துவரும் 5 மணி நேர மின் துண்டிப்பு 24 மணி நேரமாக மாறும் காலம் நீண்ட தூரத்தில் இல்லை. ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற நடவடிக்கையே இதற்குக் காரணமாகும் என இலங்கை மின்சாரசபை ஐக்கிய தொழிற்சங்க கூட்டமைப்பின் அமைப்பாளர் ரன்ஜன் ஜயலால் தெரிவித்தார்.**

நாட்டில் தற்போது முன்னெடுத்துவரும் மின் துண்டிப்பு தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது கைவசம் இருக்கும் எரிபொருள் தொடர்பாகவும் அதனால் மின்சார சபை முன்னெடுத்துவரும் மின் துண்டிப்பு தொடர்பாகவும் அரசாங்கமும் நிறுவனங்களும் பொறுப்பற்ற முறையிலேயே கருத்துத் தெரிவித்து வருகின்றன.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிக்கும் விடயங்கள் மின்சார சபைக்குத் தெரியாது.

அதனால் பொறுப்புக்கூற வேண்டிய விடயத்துக்கு பொறுப்புக்கூறாமல் இருக்கும் ஆட்சியாளர்களும் நிறுவன பிரதானிகளுமே நாட்டில் இருக்கின்றனர்.

தற்போது ஒரு நாளைக்கு 5 மணி நேரம் மின் துண்டிப்பு மேற்கொண்டு அதற்கான மாற்று வழியைத் தேடிக்கொண்டிருக்கும் ஆட்சியாளர்களுக்கு இன்னும் சில தினங்களில் 7 மணி நேரம் மின் துண்டிப்பு மேற்கொண்டு அதற்கான பதிலை தேட வேண்டி வரும்.

இந்நிலையில் 7 மணி நேரம் மின் துண்டிப்பு மேற்கொள்ளும் ஆட்சியாளர்களுக்கு 24 மணி நேரம் நாட்டில் மின் துண்டிப்பு மேற்கொள்ளும் காலம் நீண்ட தூரத்தில் இல்லை.

மின் துண்டிப்பை தொடர்ந்து முன்னெடுக்கின்றார்களே தவிர, இந்த பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வதில்லை. அதனால் நாடு பாரிய அழிவுக்கே சென்று கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்தார். (4)

# 38,500 மெற்றிக் தொன் உர இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

2022 பெரும்போகத்தில் நெற்செய்கைக்குத் தேவையான 38,500 மெற்றிக் தொன் பொட்டாசியம் உரம் அல்லது பொட்டாசியம் குளோரைடு உரங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச போட்டி ஏல முறைப்படி உரங்களின் அளவு இறக்குமதி செய்யப்பட்டு அரசாங்க உரமானியத்தின் கீழ் விநியோகிக்கப்படும்.

விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# ரஷ்ய, உக்ரேய்ன் சுற்றுலாப்பயணிகளின் விசாக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள ரஷ்யர்கள் மற்றும் உக்ரேய்னியர்களின் விசாவின் செல்லுபடியாகும் காலம் கட்டணம் ஏதுமின்றி 2 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரேய்ன் ஆகிய நாடுகளுக்கிடையில் நிலவி வரும் கடும் மோதலைக் கருத்திற் கொண்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கையில் தற்போது 11ஆயிரத்து 463 ரஷ்ய சுற்றுலாப் பயணிகளும், 3 ஆயிரத்து 993 உக்ரேய்ன் சுற்றுலாப்பயணிகளும் தங்கியுள்ளனர்.

இவ்விரு நாட்டு பிரஜைகளும் எதிர் கொண்டுள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்திற் கொண்டு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரண துங்கவினால் மேற் கூறிய யோசனை அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 26¾ சூரி 7 செவ் 9 இல்
உயரம்: 5'7"
தகைமை/ தொழில்: BSc வங்கி பிரதி முகாமையாளர் (அரச தொழில்)
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/12366

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: 42 சூரி 9 செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: முகாமையாளர் (நோர்வே)
எதிர்பார்ப்பு - பட்டதாரி பெண்
தொ.இ: B/12367

பிறப்பு: 1985 கிறிஸ்தவம் RC
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா : சூரி 1 செவ் 1 இல்
உயரம்: 5'1"
தகைமை/ தொழில்: பெயின்ட் கொன்றைக்கர்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12371

பிறப்பு :1990 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம் 1
கி.பா: 14 ½ சூரி 10 செவ் 3 இல்
உயரம்: 6'1"
தகைமை/ தொழில்: பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12372

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா:39 சூரி 8செவ் 9 இல்
உயரம்:154cm
தகைமை/தொழில்: மருத்துவர் (லண்டன்)
எதிர்பார்ப்பு:உயர் பதவி லண்டன் மட்டும்
தொ.இ:G/12420

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 75 ½ சூரி.செவ் 7 இல்
உயரம்:5"
தகைமை/ தொழில்:பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: பொறியியலாளர் வங்கி முகாமையாளர்
தொ.இ:G/12421

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 20 சூரி 8 செவ் 9 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:MBBS மருத்துவர்
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ:G/12424

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: சூரி 12 செவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: மருந்தகவியலாளர் DMO
எதிர்பார்ப்பு: பட்டதாரி தனியார் அரச தொழில்
தொ.இ:G/12426

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.




ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா மகா சிவராத்திரி நன்னாளான நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் ஆயிரக்கணக்கான அடியவர்களின் பங்கு பற்றுதலுடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:- ரவிசாந்)

# கவனிப்பாரற்றுக் கிடக்கும் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம்

(தருமபுரம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கரந்தாய் கிராமத்தில் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் ஒன்று கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கிராம மக்கள் நலனுக்காக திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் குறித்த கட்டடம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இதுவரையில் இயங்கு நிலை அற்றே காணப்படுகிறது.

குறித்த அலுவலக வேலைகள் அனைத்தும் கரந்தாய் கிராமத்தில் உள்ள முன்பள்ளி ஒன்றிலேயே இயங்கி வருகிறது. குறித்த சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் காடு வளர்ந்து கவனிப்பார் அற்று காணப்படுகிறது. குறித்த கட்டடத்தில் சுகாதார பணிகளை செய்யுமாறும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6-4-316)




தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன், சொண்ட் நிறுவனம் நடைமுறைப்படுத்திவரும் PACT திட்ட த்தில் இளையோர்களுக்கான வன்முறையற்ற தொடர்பாலும், வெறுக்கத்தக்க பேச்சும் மற்றும் தீவிரமான வன்முறைகளை தவிர்த்தலும் தொடர்பான பயிற்சி நெறியானது நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது. (படம்:-கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# கீவ்வை நெருங்கும் ரஷ்ய படை

## பாரிய தாக்குதல் நடத்த திட்டம்

(கீவ்)

**உக்ரேயன் தலைநகர் கீவ்வுக்கு வடக்கே ரஷ்ய படைகள் வரும் செயற்கைக்கோள் படம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் 64 கிலோ மீற்றர் தூரத்திற்கு ரஷ்ய இராணுவத்தின் அணி வகுப்பு உள்ளது.**



உக்ரேயன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா நேற்று 6 ஆவது நாளாக தாக்கு தலை தொடர்ந்து வருகிறது.

உக்ரேயனை சுற்றி வளைக்கும் எண்ணத்தில் அனைத்து திசைகளில் இருந்தும் படைகள் முன்னேறி வருகின்றன.

இந்த நிலையில் உக்ரேயன் தலைநகர் கீவ்வுக்கு வடக்கே ரஷ்ய படைகள் வரும் செயற்கைக்கோள் படம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் 64 கிலோ மீற்றர் தூரத்துக்கு ரஷ்ய இராணுவத்தின் அணி வகுப்பு உள்ளது.

இராணுவ வாகனங்கள், பீரங்கிகள், தளபாடங்கள் ஆகியவற்றுடன் ரஷ்ய வீரர்கள் 64 கிலோ மீற்றருக்கு அணிவகுத்து தலைநகரை நோக்கி செல்கிறார்கள்.

ஏற்கனவே கீவ் நகர மையப்பகுதியில் இருந்து ரஷ்யப் படைகள் 25 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

கீவ்வை நோக்கி பெரும் ஆயுதங்களுடன் ரஷ்ய படை முன்னேறி வருவதால் அங்கு பெரிய அளவில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் உக்ரேயன் - ரஷ்யா இடையே பெலரஸ் நாட்டில் பேச்சு வார்த்தை தொடங்கியதை அடுத்து ரஷ்யாவின் தாக்குதல் தீவிரம் குறைந்துள்ளதாக உக்ரேயன் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தலை நகர் கீவ்வை நோக்கி வடக்கு பகுதியில் இருந்து ரஷ்ய படைகள் வந்து கொண்டிருக்கின்றன. (4)



# ஜூடோ சம்...

## பதவி புடினி...



(மொஸ்கோ)

உக்ரேயன் மீது ரஷ்... படையெடுத்துள்ளதற்கு கட... டனம் தெரிவிக்கும் வ... யில், அந்த நாட்டு ஜனா... பதி விளாடிமிர் புடினுக்... அளிக் கப்பட்டுள்ள சர்வதே... ஜூடோ சம்மேளனத் த... வர் பொறுப்பு பறிக்கப்ப... ள்ளது.

இது குறித்து சம்மேளன... கடந்த ஞாயிற்றுக்கிழமை... வெளியிட்டுள்ள அறிக்... யில்,

உக்ரேயனில் தற்போ...

# உக்ரேயன் நாட்டில் இருந்து 5 லட்சம் பேர் இடம்பெயர்வு



(கீவ்)

உக்ரேயன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரேயன் நாட்டின் ஏராளமான இராணுவ இலக்குகளை ரஷ்ய படைகள் தாக்கி அழித்துள்ளன.

அதேவேளை, அணு ஆயுதங்களையும் தயார் நிலையில் வைக்க படையினருக்கு ரஷ்ய ஜனாதிபதி உத்தர விட்டுள்ளதால் 3 ஆம் உலகப் போர் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதற்கிடையில், ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவதால் உக்ரேயனில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில், உக்ரேயனில் இருந்து 5 இலட்சம் பேர் வெளியேறியுள்ளதாக ஐ.நா. சபையின் அகதிகளுக்கான பிரிவு தெரிவித்துள்ளது.

உக்ரேய்னில் இருந்து வெளியேறிய பெரும்பாலான மக்கள் அண்டை நாடுகளான போலந்து, ஹங்கேரி, ஸ்லோவாக்கியா, ருமேனியா மற்றும் மால்டோவா உள்ளிட்ட நாடுகளில் தஞ்சமடைந்துள்ளதாக ஐ.நா.தெரிவித்துள்ளது. (4)

# தடை செய்யப்பட்ட ஆயுதத்தை பயன்படுத்தியது ரஷ்யா

(கீவ்)

உக்ரேயன் போர்க்களத்தில் தடைசெய்யப்பட்ட தெர்மோபரிக் ஆயுதத்தை ரஷ்யா பயன்படுத்தியுள்ளதாக அமெ ரிக்காவிற்கான உக்ரேயன் தூதர் ஒக்ஸானா மார்க்க ரோவா தெரிவித்துள்ளார்.

தெர்மோபரிக் ஆயுதங்களை வழக்கமான வெடி மருந்துகளாக போராட்ட களங்களில் பயன்படுத்துவதில்லை.

தெர்மோபரிக் ஆயுதங்கள், உயர் அழுத்த வெடிபொருட்களால் நிரப்பப்பட்டு, சுற்றியுள்ள சூழலில் இருந்து ஒட்சிசனை உறிஞ்சி மிகவும் சக்தி வாய்ந்த வெடிப்பு மற்றும் அழுத்த அலையை உருவாக்குகின்றன.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின்படி, ரஷ்ய குடியரசின் செச்சினியாவில் அவற்றின் பயன்பாடு இதற்கு முன்னர் கண்டறியப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமையன்று, ரஷ்ய நகரமான பெல்கோரோட் அருகே தெர்மோபரிக் உந்துகணை ஆயுதத்தை பார்த்ததாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (4)



# அணு ஆ...

## அமெரிக்கர்க...

(வோஷிங்டன்)

அணு ஆயுதப் போர் குறித்து அமெரிக்கர்கள் கவலைப்படத் தேவையில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்தார்.

உக்ரேயன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போருக்கு எதிராக மேற்கத்தைய நாடுகள் கடும் நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில் ரஷ்ய இராணுவத்தின் அணு ஆயுதப் படை பிரிவை விசேட எச்சரிக்கையுடனான தயார் நிலையில் இருக்குமாறு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தர விட்டுள்ளார்.

மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை நோக்கி மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. மேலும் சட்ட விரோதமான தடைகளையும் விதித்துள்ளன. இதற்கான எதிர்வினை குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்றும் புடின் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் அணு ஆயுத யுத்தம் குறித்து அமெரிக்கர்கள் கவலைப்பட தேவையில்லை என ஜனாதிபதி ஜோ பிடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ம்மேளன தலைவர் ...னிடமிருந்து பறிப்பு



...ஷ்யா ...கண் ...வகை ...னாதி ...னுக்கு ...வதேச ...தலை ...ப்பட்டு ...ளனம் ...ழமை ...க்கை ...போது

நடை பெற்று வரும் போர் காரணமாக, ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு வழங்கப்பட்டிருந்த தலைவர் பட்டம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜூடோ தற்காப்பு விளையாட்டில் மிகவும் ஆர்வமுடைய புடின், கடந்த 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கின் அந்த விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# உக்ரேய்ன் ஜனாதிபதியை கொல்ல சதி!

## 400 கூலிப்படையினரை அனுப்பியது ரஷ்யா

**(மொஸ்கோ)**

**ஒருபுறம் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொண்டுவிட்டு, உக்ரேய்ன் ஜனாதிபதியை கொல்ல கூலிப்படையை ரஷ்யா அனுப்பி உள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.**

நேட்டோ படையில் உக்ரேய்ன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யா கடந்த 24 ஆம் திகதி முதல் அந்த நாடு மீது. தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் உக்ரேய்ன் ஜனாதிபதி வால்டிமிர் ஜெலன்ஸ்கியை கொல்ல 400 கூலிப்படையினரை ரஷ்யா அனுப்பி உள்ளதாக பரபரப்பான தகவல் வெளியாகி உள்ளது.

ரஷ்யாவில் உள்ள வாக்னர் குழுவைச் சேர்ந்த தனியார் கூலிப் படை அமைப்பு 400 பேரை ரஷ்யாவுக்கு அனுப்பி உள்ளது. இவர்கள் ஆபிரிக்காவில் இருந்து உக்ரேய்ன் தலைநகர் கீவ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.



வாக்னர் குழுமத்தில் 2 ஆயிரம் முதல் 4 ஆயிரம் பேர் வரை கூலிப் படையினராக உள்ளனர். இந்த அமைப்பு ரஷ்ய ஜனாதிபதி விளாடி மிர் புடினின் கூட்டாளியான யெவ்ஜெனி பிரிகோஜினால் நடத்தப்படுகிறது.

இந்தக் கூலிப்படையை சேர்ந்த 400 பேர் ஆபிரிக்காவில் இருந்து பெலரஸ் வழியாக கீவ் நகருக்குள் 5 வாரங்களுக்கு முன்பு நுழைந்து விட்டதாகவும் அந்த தகவல் தெரிவிக்கிறது.


இந்த கூலிப் படையினருக்கு உக்ரேய்ன் ஜனாதிபதி வால்டிமிர் ஜெலன்ஸ்கியை தேடி கண்டுபிடித்து கொல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது கூட்டாளியான கூலிப்படை அமைப்புக்கு இந்த உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளதாகவும் அந்தத் தகவல் தெரிவிக்கிறது. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உக்ரேய்ன் ஜனாதிபதி ஏற்கனவே தன்னை கொல்ல ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்று குற்றம் சாட்டி இருந்தார். தன்னை கொல்வது தான் ரஷ்யாவின் முதன்மை நோக்கம் என்றும், தன்னையும் தனது குடும்பத்தையும் அழித்துவிட்டால் நாட்டை அழித்து விடலாம் என்று ரஷ்யா கருதுவதாகவும் அவர் கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# ...ஆயுதப் போர் குறித்து ...்கள் அச்சமடையத் தேவையில்லை

## பிடன் தெரிவிப்பு



...னார்.

அதேவேளை, அமெரிக்கா தனது அணு ஆயுத படைப் பிரிவை எச்சரிக்கை நிலையில் வைப்பதற்கான தேவை எதுவும் தற்போதைய சூழலில் இல்லை என வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் ஜென்சாகி தெரிவித்தார்.

அணு ஆயுதப் படைப்பிரிவை உச்ச தயார் நிலையில் வைக்குமாறு ரஷ்ய ஜனாதிபதி புடின் இட்டுள்ள கட்டளை குறித்து நாங்கள் மதிப்பிட்டு வருகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவோ இல்லது 30 நாடுகளைக் கொண்ட நேட்டோ கூட்டணியோ ரஷ்யாவுடன் மோதலுக்கு விருப்பவில்லை என்று சாகி கூறினார்.

அணு ஆயுதங்கள் தொடர்பாக இது போன்ற ஆத்திரமூட்டும் புடினின் சொல்லாட்சி ஆபத்தானது. இது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் ஜென் சாகி குறிப்பிட்டார்.

இதற்கிடையே, அணு ஆயுதங்களை பயன்படுத்துவது பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என்று ரஷ்யாவும் அமெரிக்காவும் நீண்ட காலமாக ஒப்புக் கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அணு ஆயுத யுத்தத்தில் யாரையும் யாரும் வெல்ல முடியாது. ஒருபோதும் அணு ஆயுதப் போரில் ஈடுபடக் கூடாது என்பதை உறுதிப் படுத்தும் கூட்டு அறிக்கைகளில் ரஷ்யா கையெழுத்திட்டுள்ளதாக வெள்ளை மாளிகை சுட்டிக்காட்டியுள்ளது. (4)

# 70 போர் விமானங்களை அனுப்பிய ஐரோப்பிய நாடுகள்



(கீவ்)

பல்கேரியா, போலந்து, சுலோவாக்கியா ஆகிய 3 நாடுகள் 70 போர் விமானங்களை வழங்க உள்ளதாக உக்ரேய்ன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உக்ரேய்ன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளதால் உக்ரேய்னுக்கு பெரும்பாலான நாடுகள் ஆயுத உதவிகளை வழங்கி வருகிறது. இந்த விடயத்தில் ரஷ்யா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

பெரும்பாலான நாடுகள் ரஷ்யாவுக்கு பொருளாதார தடை விதித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, போர்த்துக்கல், இத்தாலி, ருமேனியா, நெதர்லாந்து, டென்மார்க் செக்குடியரசு மற்றும் அமெரிக்கா, கனடா, இஸ்ரேல் ஆகியவை இராணுவ உதவிகளை உக்ரேய்னுக்கு அளித்துள்ளன.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 3 நாடுகள் 70 போர் விமானங்களை உக்ரேய்னுக்கு வழங்குகின்றன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆண்டவரின் அருளைப் பெற்றுத் தருகின்ற தருணமாக தவக்காலம் நமக்கு அமையட்டும்

நிகழ்கால செயற்பாடுகள் வானமும் பூமியும் அழிந்தாலும் என் வார்த்தை அழியாது என்ற ஆண்டவரின் அருள் வாக்கையே ஆட்டம் காண வைக்கின்றன எனலாம். நான் உலகம் முடியும் காலம்வரை என்றும் உங்களோடு இருக்கின்றேன் என்று கூறிய இறைவனை தேடிக் கூடி ஓட வேண்டும் என்று இக்காலத்தில் நற்செய்தி நானிலமெக்கும் ஒலிக்கின்றது. கத்தோலிக்கர்கள் தவக்காலம் என்னும் காலத்திற்குள் இன்று நுழைகிறார்கள்.

**கத்தோலிக்கர்களின் திரு தவக்காலம் என்றால் என்ன?**

வழிபாட்டு ஆண்டுச் சக்கரத்தில் தவக்காலக் காலமும் ஒன்றாகும்.

சுருங்கக்கூறின் எம் ஆன்மாவின் ஏற்றத்திற்காக ஆண்டவரால் வழங்கப்பட்ட அருமை



யான காலமே தவக்காலம் எனலாம். இறைவிருப்பத்தை வாழ்வில் ஏற்று அதன்படி வாழ்ந்து கடவுளோடும் மனிதரோடும் ஒப்புரவாவதற்கான காலமே ஆகும். நாம் அனைவரும் மீண்டும் ஒருமுறை எம் ஆன்மிகத் தேடலை வழிப்படுத்தி வலுப்படுத்தி வளப்படுத்த கிடைக்கும் காலமே தவக் காலம் எனக் கூறலாம்.

தவக்காலத்தின் தொடக்க நாளான இப்புதனை திருநீற்று புதன் என்று கத்தோலிக்கர் அழைப்பர். திருப்பலிப் பூசையில் பங்கு கொள்பவர்களின் நெற்றியில் இன்று, நாம் மண்ணுக்குரியவர்கள், மண்ணுக்கே திரும்ப வேண்டும் என்பதை நினைவுபடுத்த சிலுவை அடையாளம் சாம்பலால் நெற்றியில் இடப்படுகின்றது.

சாம்பல் மனமாற்றத்தை குறிக்கும் ஓர் அடையாளமாக பைபிளில் பயன்படுத்தப்படுகின்றது. பல தீமைகளை செய்து பரமனுக்குத் தொலைவில் இருந்த நினிவே மக்கள் இறைவனின் தண்டனையில் இருந்து தப்பி அவரோடு ஐக்கியப்படுத்திக் கொள்வதற்காக மனம் மாறுகையில் சாக்கு உடை உடுத்திக் கொண்டு சாம்பலின் மீது உட்கார்ந்தார்கள் என்று பைபிள் (யோனா 4:6) கூறுகிறது.

யோவேல் (யோவே 2.13) இறைவாக்கினர் "நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் முழு இதயத்தோடும் திரும்பி வாருங்கள்" என்றார். இதனையே திருப்பாடல் ஆசிரியர் தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை இறைவன் புறக்கணிக்கமாட்டார் என்று உறுதிப் படுத்துகிறார்.

(திபா 50-17) இறைவனுக்கு ஏற்புடைய இதயத்தை நாம் உருவாக்க மூன்று வழிகள் உள்ளன. செபம், தவம், தர்மம் என்று நற்செய்தி கூறுகின்றது.

நோன்பு இருத்தல், இறை வேண்டலில் ஈடுபடுதல், தர்மம் செய்தல் ஆகியவை தலை சிறந்த அறச்செயல்களாகக் கருதப் பட்டன. இயேசு இச் செயல்களின் மதிப்பையோ தேவையையோ சிறப்பையோ மறுத்துக் கூறவில்லை. அன்று போல இன்றும் நோன்பு, இறை வேண்டல், ஈகை ஆகிய நற் செயல்கள் மனிதருக்குத் தேவையே. நோன்பிருக்கும் போது பிற மனிதரின் பசியைப் போக்கும் எண்ணம் கொண்டுள்ளோமா? இறைவேண்டல் செய்யும்போது பிறருக்காகக் கடவுளை மன்றாடுகின்றோமா? தர்மம் செய்யும்போது பிறருக்கு உதவுகின்ற மனநிலை கொண்டிருக்கிறோமா? இக்கேள்விகளுக்கு நாம் "ஆம்" எனப்பதில் கூற முடிந்தால் அறச்செயல்கள் நமக்கு நன்மை தந்து கடவுளின் அருளை நாம் அடைந்திட வழியாகும்.

இதற்கு நேர்மாறாக, நாம் புரிகின்ற "அறச்செயல்கள்" வெளிவேடமாக இருக்கும் பட்சத்தில் அவற்றால் ஒருவேளை பிறர் நலமடைந்தாலும் நாம் நலமடையப் போவதில்லை. கடவுள் நம் உள்ளத்தில் உறைபவர்.

அவர் நம் உள்ளத்தைத் ஊடுருவி- துருவி அறிபவர். எனவே கடவுளின் பார்வையில் நாம் நல்ல மனிதராக வாழ வேண்டும்.

இதற்கு நம் உள்ளத்தில் தூய்மையும் நேர்மையும் ஓங்கி விளங்க வேண்டும். அதே நேரத்தில் நாம் புரிகின்ற அறச் செயல்கள் பிறருடைய நன்மைக்காகவும் செய்யப்பட வேண்டும்.

எனவே நாம் கடவுளோடும் நம்மோடும் பிறரோடும் ஒப்புரவு கொண்டு உறவுகளை வளர்க்க உதவ வேண்டும். நாம் தொடங்குகின்ற தவக்காலம் அப்போது தான் நமக்குக் கடவுளின் அருளைப் பெற்றுத் தருகின்ற தருணமாக இருக்கும்.

ம.பிரான்சிஸ்க் - ஆசிரியர்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரான எமது போராட்டம் தொடரும்-சுமந்திரன்

(குருமன்காடு)

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் குற்றச்சாட்டு தொடர்பில் சுமார் 300 இற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கைது செய்யப்பட்ட நிலையில் இன்னமும் 200 இற்கு மேற்பட்டவர்கள் எந்தவித குற்றச்சாட்டுமின்றி சிறையில் இருக்கிறார்கள். தற்போது அவர்களுக்கும் இந்த வலி தெரியும். அதனால் அவர்களும் திரண்டு வந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு ஆதரவு வழங்குகிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் கையெழுத்துப் போராட்டம் வவுனியாவில் நேற்று முன்தினம் ஆரம்பமான நிலையில் அங்கு வருகை தந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் வவுனியா மாவட்டத்திலும் ஆரம்பமாகிறது. மக்கள் மிகுந்த ஆர்வமாக இந்த கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இது ஒரு மக்கள் போராட்டமாக இருக்கிறது.. தமிழ் பகுதிகளில் இந்தப் போராட்த்திற்கு அதிக வரவேற்பு இருக்கிறது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் குற்றச்சாட்டு தொடர்பில் 300 இற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு இன்னமும் 200 இற்கு மேற்பட்டவர்கள் எந்தவித குற்றச்சாட்டுமின்றி சிறையில் இருக்கிறார்கள்.

தற்போது அவர்களுக்கும் இந்த வலி தெரியும். அதனால் அவர்களும் திரண்டு வந்து ஆதரவு வழங்குகிறார்கள். குறிப்பாக முஸ்லிம் பெண்களின் ஆதரவு அதிகமாகவுள்ளது.



சிங்கள பகுதிகளிலும் இதற்கு ஆதரவு கிடைக்கிறது.

ஆகவே, நாடளாவிய ரீதியில் மக்கள் போராட்டமாக அனைத்து தரப்பினரும், அனைத்து கட்சிகளும் சேர்ந்து கோருகின்ற ஒரு போராட்டமாக மாறியிருக்கின்றது. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் வரை எமது போராட்டம் தொடரும். கையெழுத்துப் போராட்டம் அதில் ஒரு அங்கம் எனவும் அவர் தெரிவித்தார். (க-6-4-250)

# முதிரைக் குற்றி கடத்திய இருவர் கைது



(மன்னார்)

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, இலுப்பைக் கடவை பகுதியில் நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை மிகவும் சூட்சுமமான முறையில் வாகனம் ஒன்றில் பதுக்கி கொண்டு செல்லப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினர் மற்றும் மடு வனவள பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கைகளின் போதே குறித்த மரக்கடத்தல் முறியடிக் கப்பட்டுள்ளது.

வாகனம் ஒன்றில் நெல் மூட்டைகளுக்கு கீழே பதுக்கி வைத்து கொண்டு செல்லப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான சுமார் 22 முதிரை மரக் குற்றிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட முதிரை மரக்குற்றிகள், வாகனம் மற்றும் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும், மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6-4-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 320 | 280 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 350 | 400 |
| தக்காளி | 240 | 240 | 260 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 100 | 80 |
| கோவா | 100 | 100 | 160 | 140 |
| கரட் | 300 | 350 | 350 | 400 |
| பூசணி | 120 | 150 | 140 | 160 |
| புடோல் | 180 | 200 | 160 | 200 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 120 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 160 |
| பாகற்காய் | 300 | 250 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 240 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 120 | 120 | 160 | 200 |
| பீற்றூட் | 140 | 130 | 240 | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 1200 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 250 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 160 | 250 |
| கீரை - 1 பிடி | 110 | 120 | 50 | 100 |
| தேசிக்காய் | 100 | 160 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 150 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 180 | 240 |
| முள்ளங்கி | 80 | 120 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 100 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | 120 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் நெற்செய்கையாளர்கள் எரிபொருள் இன்மையினால் பாதிப்பு

(நெளுக்குளம்)

**வவுனியாவில் நெற்செய்கையாளர்கள் எரிபொருள் இன்மையினால் விதைத்த நெல்லை அறுவடை செய்ய முடியாது பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.**



பெரும்போக நெற்செய்கையானது வவுனியா மாவட்டத்தில் 22000 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்டதுடன் அறுவடையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் விவசாயிகள் அறுவடையினை மேற்கொள்வதில் பெரிதும் இன்னலுக்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக கடந்த சில நாட்களாக எரிபொருளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணமாக அறுவடை இயந்திரங்களிற்கான எரிபொருட்களை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு பெறுவதாக இருந்தாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், அவ்வாறு கிடைக்கும் எரிபொருட்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கும் நிலையே தற்போது காணப்படுகின்றது.

இதன் காரணமாக விவசாயிகள் தாங்கள் விதைத்த நெல்லினை அறுவடை செய்ய முடியாத நிலைக்குள்ளாகியுள்ளனர்.

மேலும் பெரும்போக நெற்செய்கை ஆரம்பத்தில் இருந்து உரம், கிருமிநாசினிகளிற்கான தடை போன்ற காரணங்களினால் ஏற்கனவே விளைச்சல் குறைந்த நிலையில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக விளைந்த கொஞ்ச நெல்லை கூட பெற முடியாமல் போய்விடுமோ என்ற அச்ச நிலை தற்போது விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை 6000 ஹெக்டேயரில் சிறுபோக நெற்செய்கை வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிலையில் சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்வது கேள்விக்குறியாகவே உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (க-6-4-299)

# இயற்கை உரப் பாவனை மண்ணையும் மக்களையும் பாதுகாக்கும்

## கிளி.அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்

(கண்டாவளை)

பயிர்ச்செய்கைகளின் போது இயற்கை உரங்களை பயன்படுத்துவதனால் நிறையவே நன்மைகள் உள்ளன. இது தொடர்பில் அனைவருக்கும் விழிப்புணர்வுகள் அவசியமாகும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட விவசாய குழுக்கட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராம மட்டங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மத்தியில் இயற்கை உரப் பயன்பாடுகள் தொடர்பிலும் அதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பிலும் மேலதிகாரிகள் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்.

இயற்கை உர பாவனையால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றி நாங்கள் சிந்திப்பதில்லை இராசாயன உரங்களால் புதிய புதிய நோய்கள் ஏற்படுகின்றன இதற்கான மருத்துவ தேவைகளை அரசாங்கமே செய்ய வேண்டியுள்ளது.

இது நமது நாட்டினுடைய பொருளாத்ாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இயற்கை உரப்பயன்பாடு என்பது ஒரு மாற்றத்தை கொண்டு வந்துள்ளதாகவே குறிப்பிடப்படுகின்றது. இதனால் மக்களுக்கும் நாட்டுக்கும் என்ன நன்மைகள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். மாற்றங்களை கொண்டு வரும்போது கஸ்டங்கள் இருக்கலாம் அதனால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன என்பதை உணர வேண்டும்.

கடந்த போகத்தில் சேதனப் பசளைகள் பயன்படுத்துவதற்குரிய காலத்தில் கிடைக்காமல் போயிருக்கலாம் அல்லது கால தாமதங்கள் ஏற்பட்டு இருக்கலாம் ஆனால் இனிவரும் காலங்களில் அவ்வாறு இல்லாமல் முன்கூட்டியே சேதனப் பசளை பயன்படுத்தி உரிய காலத்துக்கு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் போது ஒரு மாற்றத்தை நோக்கி முன்னேறலாம் எனவே இயற்கை உரத்தை பயன்படுத்துவதற்கு அனைவரும் முன் வர வேண்டுமென்று அவர் தெரிவித்துள்ளார். (க-4-6-315)

# எரிபொருளைப் பெற ஆவன செய்யுங்கள்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் வேண்டுகோள்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் இருந்து பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளிற்கு சுழற்சி முறையில் எரிபொருள் கிடைப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தி தருமாறு வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலைமை தொடர்பாக வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், தனியார் பேருந்து தரப்பினராகிய நாம் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் மக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்றோம். குறிப்பாக பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் எமது பேருந்துகளுக்கான எரிபொருள் மிகவும் தாமதமாகவே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து கிடைக்கின்றது. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே வழங்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

எதிர்வரும் வாரத்தில் பாடசாலைகளும் ஆரம்பமாக இருக்கின்றது. எனவே இந்த நிலைமை நீடித்தால் பாடசாலை மாணவர்களுக்கான சேவைகளை வழங்குவதிலும் பாரிய சிக்கல் நிலைமை இருக்கின்றது.

எனவே பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு நாளாந்தம் தேவையான எரிபொருளை சுழற்சி முறையில் வழங்குவதற்கு ஆவண செய்யுமாறு அதிகாரிகளை கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (க-6-4-299)

# இன்று ஒரு தகவல்

## நாம் செய்வதெல்லாம் சரியா?

வேண்டுமென்றே தவறு செய்கிறவர்களை இக்கட்டுரைக்கு அப்பாற்பட்டவர்களாக ஆக்கிவிடுவோம்.

ஆனால் பொதுவாக,

நாம் எந்த ஒரு முடிவை எடுத்தாலும் நாம் எந்த ஒரு செயலை செய்தாலும் அவை நம்மைப் பொறுத்தவரை சரியானவையாகவே படுகின்றன.

வேறு வகையில் சொல்ல வேண்டுமானால் நமக்குச் சரியென்று படுகின்றவற்றையே நாம் செய்யத் துணிகிறோம்.

இது ஒரு மேலோட்டமான உணர்வே அன்றி வேறு அல்ல. காரணம், நம்மை அறியாமல் ஒரு வித சுயநலம் நம் செய்கைகளில் கலந்து விடுகிறது. மனச்சாட்சியைக் கூட பல சந்தர்ப்பங்களில் உறங்க வைத்து விடுகின்றோம். மேலும், இன்னொரு தவறும் நடந்து விடுகிறது. அது, அவசரமான முடிவு.

ஆக, எத்தனை வழிகளில் நாம் செய்வது தவறு என்கிற சூழ்நிலை உருவாகி விட வாய்ப்புகள் இருக்கின்றன பாருங்கள்!

நாம் செய்வதெல்லாம் சரி என்று நமக்கே மிக உறுதியாகத் தோன்ற வேண்டுமானால் முதற்கட்டமாக முன்னர் கூறிய மூன்று காரணங்களால் (சுயநலம், மனச்சாட்சியின் உறக்கம், அவசரம்) தவறு நேர்ந்திருக்க வாய்ப்பில்லை. என நீங்கள் உறுதியாக நம்ப வேண்டும்.

அதே நேரத்தில், அப்படி நீங்கள் நம்பிய பிறகு உங்களைச் சுற்றியவர்களாலோ சட்டத்தாலோ அது தண்டிக்கத்தக்க செயலாக இருந்து விடக்கூடாது.

அப்படி ஒரு வேண்டத்தகாத சூழ்நிலை உருவாகி விடுமானால் அதற்கு பரிகாரம் தேடுவது தான் சரியான வழி.

எப்படி?

முதலில் நாம் செய்தது தவறு என்பதை கௌரவம் பார்க்காமலும் வெட்கத்தை விட்டு எவர் முன்னிலையிலும் ஒப்புக்கொள்ள வேண்டும். தவறான முயற்சிகள் பாரியளவில் இருந்தால் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அடியோடு பின்வாங்க வேண்டும்.

இவற்றையெல்லாம் நாம் உணராமல், நாம் செய்த காரியங்களால் எதிரான பலன்கள் உருவாகி, அவை நம்மைப் படுகுழியிலும் பாதாளத்திலும் தள்ளக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்ட பிறகும் கூட நாம் செய்தது தான் சரி என்று உடும்புப்பிடியாய் இருப்பதும், என்ன நஷ்டம் வந்தாலும் நான் சந்திக்கத் தயார்! என்று அறைகூவல் விடுப்பதும்

அறைவேக்காட்டுத் தனத்தின் உச்சகட்டச் செயலாகும்.

நம்மை நம் மனமே ஏமாற்றி விடும் சூழ்நிலையில் கூட நாம் செய்யும் தவறான காரியங்கள் பெருத்த நஷ்டத்தை தந்து விடுவதில்லை என்பேன்.

ஆனால், தவறுகளை உணரக்கூடிய சூழ்நிலை உருவான பின்பும் கூட ஊரால்–உலகால் அவைச் சுட்டிக்காட்டப்பட்ட பிறகுங் கூட, போக்கை மாற்றிக் கொள்ளாமல் எப்போதும் போல் தொடர்ந்து செயற்பட்டு வந்தால்

நாம் செய்வது கொஞ்சமும் சரியல்ல!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலி மாமா கதைகள்

## நற்சான்றிதழ்கள்



குமரன் என்ற குடியானவனின் மகன் இராமநாதன் என்பவரின் கடையில் கணக்கர் வேலை காலியாக இருக்கிறது என்று கேள்விப்பட்டு அவரைக் காணச் சென்றான்.

அவரும் "நீ ஆயிரம் ரூபாய் பிணை கட்ட வேண்டும், அல்லது நீ நாணயமானவன் என இவ்வூர் இரு பிரமுகர்கள் சான்றிதழ்கள் கொடுத்து ஆயிரம் ரூபாய்க்கு உறுதிமொழிப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்; இப்படி செய்தாலே உனக்கு இந்த வேலை" என்றார்.

குமரனும் சற்று யோசித்து "ஐயா! இன்று மாலை கடை மூடியதும் என்னோடு வாருங்கள். நீங்கள் கேட்ட தொகையையோ அல்லது உறுதிமொழிப் பத்திரங்களையோ வாங்கிக் கொடுக்கிறேன்" என்றான்.

அன்று மாலை குமரன் இராமநாதனை அழைத்துக் கொண்டு வட்டிக் கடை வயிரவன் வீட்டிற்குப் போனான். அவன் அவரிடம் தன் காரணத்தைக் கூறி ஆயிரம் ரூபாய் கடன் கேட்டான்.

வயிரவனும் "நீ நல்லவன், நேர்மையானவன், பொய் பேசாதவன் என்று எனக்குத் தெரியும். நீ என் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் தான் இருக்கிறாய். ஆனால் உன்னால் எப்படிக் கடனை வட்டியோடு திருப்பிக் கொடுக்க முடியும்? எனக்கு உன் பொருளாதார நிலை தெரியும். எனவே கடன் கொடுக்க முடியாது" என்று கூறிவிட்டார்.

குமரன் இராமநாதனை அழைத்துக் கொண்டு வெளியே வந்து முத்துசாமி என்பவரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

முத்துசாமியும் குமரன் சொன்னதைக் கேட்டுவிட்டு "சிறுவயது முதல் உன்னை நான் அறிவேன். நீ என் மகனின் நண்பன். தப்பு தண்டாவிற்குப் போகதவன், நேர்மை யானவன் என்றெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் அதற்காக ஆயிரம் ரூபாய்க்கு உறுதிமொழிப் பத்திரம் எழுதிக் கொடுக்கச் சொல்கிறாயே. அது மட்டும் முடியாது" என்று கூறி அனுப்பிவிட்டார்.

குமரன் இராமநாதனை அழைத்துக் கொண்டு மாணிக்கம் என்ற மற்றொரு பிரமுகரின் வீட்டிற்குச் சென்றான். அவரும் குமரன் சொன்னதைக் கேட்டு விட்டு "இதோ பார் குமரா, உன் குடும்பத்தவரை நான் நன்கு அறிவேன். நீ மிகவும் நல்லவன், பொய் புரட்டு என்றெல்லாம் இல்லாதவன் என என் கணக்குப்பிள்ளை அவ்வப்போது சொல்லி வருவதையும் கேட்டுத்தான் வருகிறேன். அதற்காக என்னை ஆயிரம் ரூபாய்க்கு உறுதிமொழிப் பத்திரம் எழுதிக் கொடுக்கச் சொல்கிறாயே. இது எப்படி முடியும்?" என்று கூறித் தன்னால் முடியாது என்று கூறினார்.

குமரன் நம்பிக்கை இழந்தவனாய் இராமநாதனுடன் வெளியே வந்து "நான் எவ்வளவு முயன்றும் நீங்கள் கேட்டதைக் கொடுக்க முடியாமல் போய் விட்டது. இது என் துரதிர்ஷ்டம்" என்றான்.

இராமநாதனும் கவலைப்படாதே. உன்னைப் பற்றிய நற்சான்றிதழ்கள் தான் இந்த மூவரிடமிருந்தும் கிடைத்து விட்டனவே. அவர்கள் எழுதித்தான் கொடுக்கவில்லை என்றாலும் வாய் வார்த்தையால் உன்னைப் பற்றி அறிவித்து விட்டார்களே. அது போதும் எனக்கு. நாளையே நீ வேலைக்கு வந்து விடு" என்றார். குமரன் மகிழ்ந்து போனான்.

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




பெண் எடுத்த இடம் ஒரே இடமாய் இருந்ததால் அதனையே மடம் ஆகக் கொண்டு சனகன் விருந்தினராய்த் தங்கினர்; உணவும் களியாட்டமும் கொண்டனர். மன்னர் தம் சுற்றமும் படைகளின் ஆட்களும் உண்டாட்டுப் படலத்தில் உறங்கி மகிழ்ந்தனர்.

நாட்கள் சில நகர்ந்தன; வந்தவர் அனைவரும் தத்தம் நாடு நோக்கித் திரும்பினர். மிதிலை மகளின் மதிலைக் கடப்பதற்குத் துணையாக இருந்த தவமுனிவர் விசுவாமித்திரரும் தம் கடமை முடிந்துவிட்டது என்று கூறி விடை பெற்று நடைகட்டினார், வடபுலத்து இருந்த இமயம் நோக்கி; இமய மலைச் சாரல் அவர் தங்கித் தவம் செய்யும் தவப் பள்ளியாயிற்று. எல்லாம் இனிமையாய் முடிந்தன.

**பரசுராமர் வருகை**

பண்புமிக்க பாரத நாட்டில் துன்பம் இழைக்கும் சாதிப் பிரிவுகள் இல்லாமல் இல்லை. அந்தணர் ஞானத்திலும், வேத சாத்திரம் கற்பதிலும் விற்பன்னராய்த் திகழ்ந்தனர். நூல்கள் பல கற்ற[illegible] நுண்ணறிவு மிக்கவராக இவர்கள் விளங்கினர். தவசிகள் என்போர் பெரும்பாலும் அந்தணரே. இவர்கள் ஞானத் தலைவர்களாய் மதிக்கப்பட்டனர்.

அரசர்கள் நாட்டு ஆட்சித் தலைவர்களாய் இருந்தனர்; இவர்களைச் சத்திரியர் என்[illegible] லைகளிலிருந்து நாட்டு எல்லைகளைக் காத்தனர். அமைதியான வாழ்வுக்கு அரணாய் விளங்கினர். வலிமை மிக்கவர்களாய் விளங்கியதால் இவர்களை மக்கள், தலைவர்களாய் ஏற்றுக் கொண்டனர்.

தவசிகளை ஞானத் தலைவர் என மதித்தனர். அவர்களுள்ளும் ஒரு சிலர் மாவீரர்களாய்த் திகழ்ந்தனர். அவர்களுள் ஒருவன் பரசுராமன் என்பவன்.

அவன் சமதக்கனி முனிவர் மகன்; அம்முனிவரைக் காத்த வீரியார்ச்சுனன் என்ற அரசன் கொன்று விட்டான். தந்தையைக் கொன்றவனைப் பழி வாங்க, அந்த அரசனை மட்டும் அன்றி அவன் வாரிசுகளையும் தீர்த்துக் கட்டினான் பரசுராமன். மன்னரே அவனுக்கு நேர் எதிரியாய் மாறினர். தனிப்பட்ட பகை, சாதிப் பகையாய் உருக் கொண்டது. இருபத்தொரு தலைமுறைகளாய் அவன் மன்னன் இளைஞர்களைக்களை அறுத்து வந்தான்; அவர்கள் சிந்தும் குருதியைக் குளமாக்கி, அதில் நீராடித் தந்தைக்கு ஈமக்கடன் செய்து, அவருக்கு ஏம நெறி வகுத்துத் தந்தான்; ஒருவாறு சினம் அடங்கித் தவத்தில் கருத்தைச் செலுத்தினான்; வல்லவனுக்கு வல்லவன் தோன்றாமல் இருப்பது இல்லை.

தேவர் திருமாலுக்கும் சிவனுக்கும் பகையை மூட்டிவிட்டு, யார் பெரியவர்? என்று குரல் எழுப்பினர். ஆரம்பத்தில் புகழ்மொழிக்குச் செவி சாய்த்துத் தம் நிலை மறந்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
– திருவாசகம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழ் மக்களைக் காப்பாற்றுவதில் சர்வதேசம் இழைத்த அநீதி

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தும் தாக்குதல் காரணமாக உலக நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ளன.

இதற்கும் மேலாக, ஐ.நா பாதுகாப்புச் சபை அவசர அவசரமாகக் கூடியது.

இதனையும் கடந்து ஐ.நா சிறப்பு அவசர பொதுச்சபையும் கூட்டப்பட்டுள்ளது.

ஐ.நா சபை ஸ்தாபிக்கப்பட்ட 77 ஆண்டுகளில் இதுவரை 10 தடவைகள் மட்டுமே ஐ.நா சிறப்பு அவசர பொதுச்சபை கூடியுள்ளதென்ற பதிவில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலின்போது ஐ.நா சிறப்பு அவசர பொதுச்சபை கூடியதென்பதற்குள் இருக்கக் கூடிய முக்கியத்துவம் எத்துணை என்பது உணர்தற்குரியது.

இதுதவிர, ரஷ்யாவின் தாக்குதலை முறியடிக்கும்பொருட்டு உலக நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளையும் நிதி உதவிகளையும் தாராளமாகச் செய்து வருகின்றன.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரில் மனித உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் உலக நாடுகளும் ஐ.நா சபையும் காட்டுகின்ற கருசனை கண்டு மனம் ஆறுதலடைகின்றது.

அதேநேரம் இலங்கையில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போது இதே உலக நாடுகளும் ஐ.நா சபையும் மௌனமாக இருந்தன என்பதை நினைக்கும்போது ஏன் இந்த வஞ்சகத்தனம் என்ற கேள்வி எழவே செய்யும்.

ஆம், இலங்கையில் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களைக் கொன்றொழித்தனர்.

ஓர் இன அழிப்பாக நடந்த அந்தக் கொடுமை உலகம் அறியாத விடயமல்ல.

அதேநேரம் போருக்குள் அகப்பட்ட தங்களை சர்வதேசம் காப்பாற்றும் எனத் தமிழ் மக்கள் நம்பினர்.

ஆனால் உலக நாடுகள் இலங்கை ஆட்சியாளர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயுத உதவிகளை வழங்கி தமிழ் மக்களை அழிப்பதற்கு உதவி நின்றன.

தவிர, ஐ.நா சபையும் ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்றத் தவறியது.

கூடவே சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இலங்கை ஆட்சியாளர்களின் கட்டளையை ஏற்று வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து வெளியேறின.

அவ்வாறு அந்த நிறுவனங்கள் வெளியேறியபோது, எங்களைக் காப்பாற்றுங்கள், எங்களை விட்டுச் செல்லாதீர்கள் என்று தமிழ் மக்கள் கெஞ்சிக் கேட்டனர்.

ஆனால் அதை அந்த அமைப்புகள் கிஞ்சித்தும் பொருட்படுத்தவில்லை.

இது எதற்கானதென்பதுதான் தெரியவில்லை.

ஒரு நாட்டுப் படை இன்னொரு நாட்டின் மீது போர் தொடுத்து அந்த மக்களைக் கொன்றொழிக்கும்போது அதன்மீது சர்வதேசம் காட்டுகின்ற கருசனையை ஏன் உள்நாட்டில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டபோது காட்டவில்லை என்பதுதான் புரியாமல் உள்ளது.

ஆம், சர்வதேச நாடுகளின் பார்வையில் ஒரு அரசாங்கம் தனது நாட்டு மக்களை இனத்தின் பேரால் கொல்ல முடியும் என்ற எழுதாயாப்பேதேனும் உண்டா? என்பதுதான் நம் கேள்வி.

# டீசல் ஏற்றிய 2 கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன

டீசல் ஏற்றிய மேலும் 2 கப்பல்கள் இன்றும் நாளையும் நாட்டை வந்தடையவுள்ளன.

அவற்றில் ஒரு கப்பலில் 33,000 மெட்ரிக் தொன் ஆட்டோ டீசலும் 7,000 மெட்ரிக் தொன் சுப்பர் டீசலும் உள்ளதாக எரிசக்தி அமைச்சின் செயலாளர் K.D.R. ஒல்கா தெரிவித்தார்.

மற்றைய கப்பலில் 28,000 மெட்ரிக் தொன் டீசலும் விமானங்களுக்கு பயன்படுத்தப்படும் 9,000 மெட்ரிக் தொன் எரிபொருளும் உள்ளதாக அவர் கூறினார்.

இந்த இரு கப்பல்களுக்குமான கடன் கடிதத்தை பகிரங்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக எரிசக்தி அமைச்சின் செயலாளர் K.D.R. குறிப்பிட்டார்.

எரிபொருள் ஏற்றிய மேலும் 2 கப்பல்கள் எதிர்வரும் 6, 7 ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

# மன்னாரில் நெல் அறுவடை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடை இடம்பெற்று வருகின்ற நிலையில் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி டீசல் மற்றும் ஏனைய எரிபொருட்களை கேன்களில் பெற்றுக் கொண்டு வெளியில் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடை இடம்பெற்று வருகின்ற நிலையில் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி டீசலை கேன்களில் பெற்றுக் கொண்டு வெளியில் கொண்டு சென்று 135 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்வதாக எமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நிலையில் தற்போது நெல் அறுவடை செய்பவர்களுக்கு என மன்னார் மாவட்டத்தில் எரிபொருளை வழங்க விசேட நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசங்களில் விவசாயிகள் பெரும்போக நெல் செய்கை அறுவடையினை மேற்கொள்ள இருக்கும் விவசாய செய்கையின் ஏக்கர் அளவினை குறித்த பகுதிக்கான கம விதானை, விவசாய அமைப்பின் தலைவர் அல்லது செயலாளர் உறுதிப்படுத்தி வழங்குவதன் ஊடாக நெல் அறுவடையை மேற்கொள்ள உள்ள விவசாயிகள் தமக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்விடயம் தொடர்பில் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரிய அமைப்புக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளார்.

எனவே மக்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையை கருத்தில் கொண்டு ஏற்கனவே நெல் அறுவடையை மேற்கொண்ட மன்னார் மாவட்ட விவசாயிகள் மீண்டும் எரிபொருட்களை கொள்வனவு செய்து சேமிக்காது, இச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# எல்லேவலவில் நீராடச்சென்ற இரு மாணவர்கள் சடலங்களாக மீட்பு

(கொழும்பு)

வெல்லவாய எல்லேவல நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்குச் சென்ற இரு மாணவர்கள் நேற்று பிற்பகல் உயிரிழந்துள்ளனர்.

எல்லேவல நீர்வீழ்ச்சியை பார்வையிட நேற்று 7 பேர் கொண்ட இளைஞர்கள் குழுவொன்று சென்றுள்ளன.

குறித்த இடத்தில் நீராடச் சென்றபோதே இந்த அசம்பாவித சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல மணி நேரம் நீடித்த தேடுதல் நடவடிக்கைக்கு பின் நீரில் மூழ்கி உயிரிழந்த இரு இளைஞர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் அக்கரைப்பற்று பிரதேசத்தை சேர்ந்த 21 வயது மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

21 வயதுடைய இளைஞன் மொரட்டுவ பல்கலைக்கழக மாணவன் என்பதுடன் மற்றைய இளைஞன் இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

# எட்டு மாதத்திற்கு தேவையான எரிபொருள் இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

எட்டு மாதங்களுக்கு தேவையான 18 லட்சம் கொள்கலன் ஒக்டேன் 92 ரக பெட்ரோலை ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் நிறுவனம் ஒன்றிடம் இருந்து இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி வரை பயன்படுத்துவதற்காக இந்த பெட்ரோல் இறக்குமதி செய்யப்படவுள்ளது. பெட்ரோலை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தத்தை வழங்க, பதிவு செய்யப்பட்ட மற்றும் தற்காலிகமாக பதிவு செய்துள்ள விநியோகஸ்தர்களிடம் இருந்து விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தன.

அமைச்சரவை நியமித்துள்ள கொள்முதலுக்கான நிரந்தர குழுவின் பரிந்துரைக்கு அமைய இதற்கான ஒப்பந்தம் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் ஒக்யூ டிரேடிங் லிமிட்டட் நிறுவனத்திற்கு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (4)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

ஸ்ரீராமகிருஷ்ணர் இவற்றையெல்லாம் ஏதோ கேட்டு வைத்தார். கேட்டுக் கொண்டிருக்கும்போதே அவரது மனம் வேறு எங்கோ லயிக்கத் தொடங்கியது. ஆகவே இது பற்றிய பேச்சு மேலும் தொடரவில்லை. கூட்டங்கலைந்தது பக்தர்கள் இங்கும் அங்குமாக உலவிக் கொண்டிருந்தார்கள்.

மாலை நேரம் சுமார் ஐந்து மணி இருக்கும் ம-வும் பஞ்சவடி முதலிய இடங்களில் உலவிக் கொண்டிருந்தார். அப்போது ஸ்ரீராமகிருஷ்ணருடைய அறையின் வடக்கில் உள்ள சிறிய வராந்தாவில் ஓர் அற்புத நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

ஸ்ரீராமகிருஷ்ணர் அசையாமல் நின்றிருந்தார். நரேந்திரர் பாடிக்கொண்டிருந்தார் ஓரிரு பக்தர்கள் அருகில் நின்று கொண்டிருந்தனர். ம-வும் வந்து பாட்டைக் கேட்கலானார். பாட்டைக் கேட்டதும் அதிலேயே மனம் ஒன்றிப் போனார். இவ்வளவு இனிமையான [illegible] அவர் குருதேவரைத் தவிர வேறு யாரிடமும் எங்கேயும் கேட்டதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 08

இதனை சுருக்கமாக கூறுவதாயின் இலங்கை அரசியலமைப் பின் சட்ட ஏற்பாடுகளுக்கமைய இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்காக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிக்காகவும், முன்னர் கூறியது போல அதனோடு தொடர்புடைய வேறு விடயங்கள் தொடர்பாகவுமான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் (முதன்மை சட்டவாக்கம்) 1988 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது. 1988 ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அச்சட்டம் 1988 பெப்ரவரி 2 ஆம் திகதி முதல் அமுல் படுத்தப்பட்டது.

### மாகாண சபைக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன?

தேர்தல்கள் ஆணையாளரினால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேர்தல்கள் சட்டத்தின் மூன்றாம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு நிர்வாக மாவட்டங்களின் வதிவாளர்களின் எண்ணிக்கை, இடப்பரப்பு என்பவற்றுக்கமைய அவற்றிலிருந்து மாகாண சபைக்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1988 ஆம் ஆண்டு முதன் முதலாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலுக்காக தீர்மானிக்கப்பட்டது. அதனோடு தொடர்புடைய சனத்தொகை எண்ணிக்கையாக 1981 ஆம் ஆண்டின் பொதுசனக் கணிப்பீடே அடிப்படையாக் கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு மாகாண சபையும் அம்மாகாணத்துக்குள் அமையப் பெற்றுள்ள அனைத்து நிர்வாக மாவட்டங்களிலுமிருந்து தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு உரித்தான உறுப்பினர்களின் எண்ணிக்கையோடு இரண்டினைக் கூட்டுகின்றபோது கிடைக்கப் பெறுகின்ற தொகையை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 3(1) ஆம் உட்பிரிவில் காட்டப்பட் டுள்ளது.

இவ்வாறு மாவட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக மாகாணமொன்றிற்காக மேலும் இரண்டு உறுப்புரிமைகள் உரிய தேர்தல் சட்டத்தின் 61 அ (2) ஆம் பிரிவிற்கமைய மாகாண சபைத் தேர்தலொன்றில் மாகாணத்திலுள்ள அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெறுகின்ற அரசியல் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவுக்கு உரித்தான மிகுதி ஆசனங்கள் (Bonus seats) இரண்டை வழங்குவதற்கு மாகாணமொன்றிற்கு குறித்தொதுக்கப்படுகின்றது.

1988 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியினால் விதிக்கப்படுகின்ற கட்டளை மூலம் தீர்மானிக்கப்படுகின்ற மாகாணங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை குறிப்பான தீர்மானமாக ஏற்கப்பட்டு மாகாணத்தின் நிர்வாக மாவட்டங்களின் கீழான உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு நேரொத்தவாறு, புதிய சனத்தொகைக் கணிப்பீட்டை அடிப்படையாக வைத்து மாவட்டங்களுக்கு உரித்தாகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டது. அதற்கமைய ஒரு மாகாண சபையில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படாது. அது அட்டவணை (a) இல் காட்டியது போன்று, 1987 இல் தீர்மானித்தவாறே இருக்கும். ஆனால் புதிய சனத்தொகைக் கணிப்பீட்டின் பிரகாரம் இவ்வெண்ணிக்கை மாவட்டங்களுக்கிடையே விகிதாசார முறையில் பிரிக்கப்பட வேண்டும்.

### மாகாண சபைகளுக்கான கலப்பு முறை தேர்தல் சட்டம்-2017

இலங்கை அரசியலமைப்பின் சட்ட ஏற்பாடுகளுக்கமைய இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்காக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிக்காகவும், முன்னர் கூறியது போல அதனோடு தொடர்புடைய வேறு விடயங்கள் தொடர்பாகவுமான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர் தல்கள் சட்டம் (முதன்மை சட்ட வாக்கம்) 1988 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது என முன்னர் கூறினோம்.

இச் சட்டத்தினூடாக தேர்தல் இடப்பரப்பாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபை அதிகார எல்லைகளுக்குள் அமையப் பெற்றுள்ள நிர்வாக மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்றும் முன்னர் கூறினோம்.

இவ்வாறு நிர்வாக மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் அதாவது 50% விகிதாசார முறையிலும், ஏனைய உறுப்பினர்களில் மாவட்டங்களை வேறு பிரித்துக் காட்டுகின்ற தேர்தல் தொகுதிகளின் கீழ் எளிய பெரும்பான்மை முறையிலான தேர்தலின் அடிப்படையிலும் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கின்ற கலப்புத் தேர்தல் முறையொன்றிலான ஒரு தேர்தல் முறை 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டது.

**ஒவ்வொரு மாகாணசபையினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கை (Bonus தவிர்த்து) மொத்தம்-437**




அட்டவணை(a) – ஒவ்வொரு மாகாணசபையினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கை (Bonus தவிர்த்து)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேல் | 102 | சப்ரகமுவ | 42 | தெற்கு | 53 |
| வடமேல் | 50 | மத்திய | 56 | வடமத்திய | 31 |
| ஊவா | 32 | கிழக்கு | 35 | வடக்கு | 36 |

**உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் அதாவது 50% விகிதாசார முறையிலும், ஏனைய உறுப்பினர்களில் மாவட்டங்களை வேறு பிரித்துக் காட்டுகின்ற தேர்தல்தொகுதிகளின் கீழ் எளிய பெரும்பான்மை முறையிலான தேர்தலின் அடிப்படையிலும் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கின்ற கலப்புத் தேர்தல் முறை 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டது.**

**மாகாண சபைக்கு அதன் அதிகார எல்லைகளுக்குள் அமையப் பெற்றுள்ள நிர்வாக மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவுள்ள**

மாகாண சபைகளுக்கு உரிய மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களில் ஐம்பது சதவீதத்திற்கும் (50%) நேரொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையொன்றை தேர்தல் தொகுதிகளுக்கமைய தேர்ந்தெடுக்கும் விதத்தில் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தையும் தேர்தல் தொகுதிகளாகப் பிரிப்பதற்காக முதன்மை சட்ட வாக்கமான 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்திற்கு மேற்குறித்த திருத்தச் சட்டத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 3 அ (1) ஆம் உட்பிரிவுக்கமைய தேர்தல் 5 பேர் கொண்ட தொகுதி எல்லை நிர்ணயக் குழுவொன்றை ஜனாதிபதி 2017 ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதிய 2039/29 இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி நியமனம் செய்தார்.

அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய நியமனம் செய்யப்பட்டுள்ள எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தினர்கள் இருவரையும் உள்ளடக்கியவாறு அக்குழு நியமிக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22 பேர்...

244 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். (ம)

## வங்கக்...

கான சாத்தியம் காணப்படுவதாக கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் 4 ஆம் திகதி கனமழை பெய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என்றும் இக்காலப்பகுதிகளில் காற்று பலமாக வீசுவதுடன் இடி மின்னல் தாக்கமும் ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## எரிபொருளுக்...

திகளுக்கும் மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், ஹட்டன் மற்றும் நுவரெலியா, கொட்டகலை ஆகிய எரிபொருள் நிலையங்களை சூழ வாகனங்கள் அணிவகுத்து நிற்பதுடன், அதிகளவு தூரம் வரை எரிபொருள் நிரப்புவதற்கு மக்கள் வரிசை நீடிப்பதையும் அவதானிக்க முடிந்தது.

அத்தோடு எரிபொருளை கொள்வனவு செய்யும் போது ஒவ்வொருவருக்கும் மிகக் குறைந்த அளவிலேயே எரிபொருளை பெற்றுக்கொள்ளுமாறு, எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் கட்டுப்பாடுகளை விதித்து வழங்கி வருவதாகவும் எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம)

## தடையின்றி...

ளுக்கு அவசியமான டீசல் மற்றும் உலை எண்ணெய் என்பனவற்றை இலங்கை மின்சார சபையின் ஊடாக நேரடியாக கொள்வனவு செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் காமினி லொக்குகே இதனை தெரிவித்துள்ளார். (ம)

## 7 1/2 மணி...

இதேவேளை, மாலை 6 மணிமுதல் 8.30 மணிவரை ஈ வயைத்துக்கும் இரவு 8.30 மணிமுதல் இரவு 11 மணிவரை எஃப் வயைத்துக்கும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட இடங்களில் காலை 8 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரையான காலப்பகுதியில் 5 மணி நேர மின்வெட்டும் P,Q,R,S வலயங்களில் பிற்பகல் 1 மணிமுதல் மாலை 6 மணிவரை மின்வெட்டும் அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், மாலை 6 மணிமுதல் இரவு 8.30 மணிவரை T,U,V,W வலயங்களுக்கும் இரவு 8.30 மணிமுதல் இரவு 11 மணிவரை P,Q,R,S வலயங்களுக்கும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம)

## +914 பேருக்கு...

க்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அதன்படி, இலங்கையின் கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 646,948 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## ஆலய தேர்...

அந்தரங்க உறுப்புகளில் மறைக்கப்பட்டிருந்த சில தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை குறித்த ஆலயத்தில் தேர்த்திருவிழா இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம் அங்கு கூடியிருந்த நான்கு பேருடைய தங்கச் சங்கிலிகள் அறுக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து ஆலயத்திற்கு வருகைதந்த கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 9 பெண்களை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியதுடன், பெண் பொலிஸாரை பயன்படுத்தி சோதனை செய்தபோது அந்தரங்க உறுப்புக்களில் மறைத்துவைக்கப்பட்டிருந்த சில நகைகளை பொலிஸார் மீட்டுள்ளனர். (ம)

## பங்குத்...

பலியாகினர்.

ஹொரவப்பொத்தானை நோக்கி மணல் ஏற்றிச் சென்ற கனரக வாகனமும் திருகோணமலை நோக்கி வந்த காரும் நேருக்கு நேர் மோதியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காரில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே மரணமாகினர்.

திருகோணமலை, அன்புவழிபுரம் சகாய மாதா ஆலயத்தின் பங்குத் தந்தை கணேசபிள்ளை நிதிதாசன் (வயது-49) என்பவரும் கார் சாரதியுமே மரணமானார்கள்.

மரணமான பங்குத்தந்தை முன்னர் கிழக்கிலங்கை மனிதாபிமான பொருளாதார அபிவிருத்தி (எஹெட்) நிறுவனத்தின் திருகோணமலைப் பணிப்பாளராகவும் சேவையாற்றியிருந்தார். (ம)

## இரண்டாவது...

நடைபெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் இந்த பேச்சுவார்த்தை மூன்று மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது.

சமரச பேச்சுவார்த்தையின்போது, உக்ரைன் பிரதிநிதிகள், "ரஷ்யா உடனடியாக போரை நிறுத்த வேண்டும்,

தனது படைகள் உக்ரைனை விட்டு முழுமையாக வெளியேற ரஷ்யா உத்தர விட வேண்டும்" என வலியுறுத்தியது. ஆனால் பேச்சுவார்த்தையில் எந்தவித முடிவும் எட்டப்படவில்லை. (ம)

## எரிபொருளை...

ருளை தனியார் தரப்பினரிடமிருந்தேனும் பெற்றுக்கொள்ளுமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொகுகேவிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது நாளாந்தம் அமுல்படுத்தப்படும் மின்விநியோக தடை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மின்னுற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ள மின்சாரத்துறை அமைச்சு பொருத்தமான திட்டங்களை துரிதமாக செயற்படுத்த வேண்டும்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அல்லது தனியார் தரப்பினரிமிருந்து மின்நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ளுமாறும் ஜனாதிபதி மின்சாரத்துறை அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம)

## கருத்து...

ணைத் தடுப்பு மற்றும் விசாரணைக்கு உட்பட்ட நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் பாதுகாக்கவும் வேண்டும் என்பதில் இலங்கை உறுதியாக உள்ளது. கருத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயக சுதந்திரங்களை கட்டுப்படுத்தக் கூடாது என்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு 43 வருடங்களின் பின்னர், அதனைத் திருத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கையின் அனுமதியின்றி 46/1 தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையானது நல்லிணக்க முயற்சிகளுக்கு தடைகளை ஏற்படுத்தவும், கடந்த கால காயங்களை மீண்டும் திறப்பதன் மூலம் வெறுப்பை வளர்க்கவும் சமூகத்தை துருவப்படுத்தவும் மட்டுமே முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார். (ம)


மெகா பவர்
திகதி 01/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1041
L 21 10 36 65 70

ஹந்தஹன HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 034
மிதுனம் 36 40 47 49 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/03/01
சீட்டிழுப்பு இலக்கம் 4693
P 2 3 4 7 2 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 01.03.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2988
P 04 30 50 54
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.03.01
சீட்டிழுப்பு இலக்கம் - 723
A 27 36 49 65
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

செவன
திகதி 01/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 360
S 07 11 66 67

வெல்லப்பட்ட அதிர்ஷ்டம்
N.L.B
01.03.2022 அன்று சீட்டிழுக்கப்பட்ட செவன (0360) சீட்டிழுப்பில் நான்கு இலக்கங்கள் சரியாக பொருந்தியதில் யாழ். நகர விற்பனை முகவர்
கனகலிங்கம் திலகவதி
(N-220026) ஊடாக ரூபா 500,000/= வெல்லப்பட்டுள்ளது. (C-3834)

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1496
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,465,740/-
வெற்றி இலக்கங்கள் 01 03 19 33 ஆங்கில எழுத்து Z
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.01
சீட்டிழுப்பு இல: 3831
வர்ணம்: இளநீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,961,360/-
வெற்றி இலக்கங்கள் 05 33 35 36 ஆங்கில எழுத்து A
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1670 நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 01.03.2022 தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் V 10 35 40 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 50,165,090/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 141
சீட்டிழுப்பு திகதி 01.03.2022
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 31 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,407,840/-

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 7,300,570/-
திகதி 01.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3382
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 25 33 48 50 மேடம்
3 3 2 9 7 0 2
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,349,100/-

12 சம்பத
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 28 01 12 68 74
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 217,537,693/-
சீட்டிழுப்பு வாரம் 846
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2022.03.01 செவ்வாய்க்கிழமை
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10391)

**076 825 7716** (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - **077 679 6623** (10428)

# எனக்கு பயமாக இருக்கிறது

## உக்ரைனில் உயிரிழக்க முன் ரஷ்ய வீரர் தனது தாய்க்கு அனுப்பிய குறுஞ்செய்தி

(மொஸ்கோ)

உக்ரைனில் கொல்லப்படுவதற்கு சற்று முன்பு ரஷ்ய வீரர் ஒருவர் தனது தாய்க்கு உருக்கமான குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதுகுறித்து ஐ.நாவுக்கான உக்ரைன் தூதர் செர்ஜி கிஸ்லிட்சியா கூறியதாவது,

உக்ரைனில் கொல்லப்படுவதற்கு சற்று முன்பு ரஷ்ய இராணுவ வீரர் ஒருவர் தனது தாய்க்கு அனுப்பிய இறுதி குறுஞ்செய்தியில், தான் பயப்படுவதாகவும் தனது இராணுவம் பொது மக்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.


மேலும் அந்த குறுஞ்செய்தியில், அம்மா, நான் உக்ரைனில் இருக்கிறேன். இங்கே ஒரு உண்மையான போர் நடந்து கொண்டிருக்கிறது. நான் பயப்படுகிறேன். நாங்கள் அனைத்து நகரங்களிலும் குண்டு வீசி தாக்குதல் நடத்துகிறோம்.

பொதுமக்களைக்கூட குறி வைக்கிறோம். மக்கள் எங்களை கடந்து செல்லவிடாமல் வாகனங்களின் கீழ் விழுகின்றனர். சக்கரங்களுக்கு அடியில் சிக்கி தூக்கி எறியப்படுகின்றனர். அவர்கள் எங்களை பாசிஸ்டுகள் என்று அழைக்கிறார்கள்.

அம்மா இது மிகவும் கடினமானது என்று கூறியிருந்தார். இது அவர் கொல்லப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு அனுப்பப்பட்ட குறுஞ்செய்தி. இந்த சோகத்தின் அளவை உணர்ந்து கொள்ளுங்கள் என குறிப்பிட்டுள்ளார். (ம)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் தர்மலிங்கம்



யாழ்.காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தர்மலிங்கம் அவர்கள் கடந்த 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சுவர்ணத்தின் (தேவி) அன்புக் கணவரும் சுதாகரன் (Husky retailer - கனடா), பிரபாகரன் (Master of Science - கனடா), கார்த்திகா (AAT - பிரித்தானியா), ஐங்கரன் (Master of engineering), அரிகரன் (Master of Science - ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிந்துஜா (கனடா), தயானி (B.Sc - கனடா), சயந்தன் (M.Sc - பிரித்தானியா), தயாந்திக்கா (MBA), சபீனா (B.Sc - ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நேயன், சனுஷ், மகிழினி, ருத்விக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம் (லிங்கம் ஸ்டோர்ஸ்), பாக்கியலட்சுமி (கொழும்பு) மற்றும் மகாலிங்கம் (லிங்கம் ஸ்டோர்ஸ்), ரதிதேவி (கொழும்பு), சரோஜினிதேவி (கனடா), பத்மசோதி (லண்டன்), தனலட்சுமி (லண்டன்), அமிர்தலிங்கம் (லண்டன்), கமலாம்பிகை (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, சபாநாயகம், பரமேஸ்வரன் மற்றும் விஜயலட்சுமி, நிர்மலாதேவி, நித்தியானந்தன், சிவராசா, ஜீவா, சிவபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பத்துமாவதி, பரஞ்சோதி, பரமராசா, நாகம்மா, காலஞ்சென்ற செல்வராசா, கமலாதேவி, காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலச்சந்திரன் (பிரதேச சபை உறுப்பினர் - காரைநகர்), நிமலேஸ்வரன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரன் (முன்னாள் கல்விப் பணிப்பாளர் - வட மாகாணம்), குணரத்தினம் (S.V.முருகேசு உரிமையாளர்), ஜெகநாதன் (வர்த்தகர் - பிரான்ஸ்) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 01.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் மு.ப 8 மணிமுதல் பி.ப 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் இன்று (02.03.2022) புதன்கிழமை காரைநகர் புதுறோட்டு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (03.03.2022) வியாழக்கிழமை மு.ப 8 மணியளவில் அவரது காரைநகர் புதுறோட்டு இல்லத்தில் இறுதிக் கிரியை நடைபெற்று பின்னர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புதுறோட்,
காரைநகர். (10412)

தகவல்: குடும்பத்தினர்
077 518 9203

# புலிகளின் காலத்தைவிட மோசமான நிலையில் நாடு

## அமைச்சர் உதய கம்மன்பில



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் காலத்தில் ஏற்பட்ட விளைவுகளை காட்டிலும் தற்போது பாரதூரமான சவால்களை எதிர்கொண்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எதிர்வரும் ஓரிரு நாட்களுக்கு தேவையான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் உள்ளது. எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண செயற்படுத்த வேண்டிய திட்டங்களை அமைச்சரவையில் பலமுறை முன்வைத்தும் அது செயற்படுத்தப்படாமலிருப்பது கவலைக்குரியது.

டொலர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை எரிபொருள் நெருக்கடி தொடரும். நாட்டு மக்களிடம் உண்மையைக் குறிப்பிட்டால் மக்கள் அதனை ஏற்றுக்கொள்வார்கள். அதனைவிடுத்து பிரச்சினை ஒன்றுமில்லை என பொய்யுரைத்தால் அது பாரிய எதிர்விளைவுகளை தோற்றுவிக்கும்.

பொருளாதார நெருக்கடியை சீர்செய்ய சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது அவசியமாகும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய அச்சம் கொண்டுள்ளார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம)

விரைவு பொதிகள் சேவை
**V2 TRAVELS**
**UK-975 /=Kg**
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-3869)
0768226240 DHL

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- யாழ்.நகரில் இருந்து 5 km தொலைவுக்கு உட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு
**076 097 3121** ®

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 60 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம். (10434)

குரு - 077 623 4204, 077 288 0152, 076 658 3621, 077 911 6983

german cooperation | Supported by the Federal Ministry for Economic Cooperation and Development | Coordinated by sequa | Implemented by OAV German Asia-Pacific Business Association | Local Project Partner CCIY | cooperation partner AHK | BM Partnership

**உங்கள் சுற்றுலா வணிகத்தை எவ்வாறு ஒழுங்கமைப்பது**

CCIY இன் 3ஆம் இணையவழி கருத்தரங்கு
வியாழக்கிழமை, 3ம் திகதி பங்குனி, 2022
நேரம்:- பி. ப 2:00 - 3:30

Via Zoom
Meeting ID : 870 3514 9123
Passcode : 229662

பேச்சாளர்கள்



Mr. S. யோகராஜன்
Tourism Promotion Officer, Tourism Bureau Northern Province.
BBA, MSc (GIS & RS), Dip (CSD)



Mr. சின்னராசன் டமபன்,
Assistant Director,
Tourism Planning and Development,
Sri Lanka Tourism Development Authority.



Mr. மலிந்த கஜநாயக்க,
Head of Corporate Affairs & Export promotions
AHK Sri Lanka, BBA (Hons). UK.

நெறிப்படுத்துபவர்



T.யூரிசன் ஜெனராஜ்
(CEO, CCIY)
B.Com.(Hons), MA.(Pub.Admin)

ஏற்பாட்டுக் குழு
யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம்,
இல.55, கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு Tel: +9421 222 6609/ +9470 366 3603 Web:- www.ccly.lk Email:- info@ccly.lk
(C-3880)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org